# வக்கீல்

660

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை




ரெஸாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

**THE VAKIL · TAMIL LAW · MAGAZINE**

## "வக்கீல்"

பொது மக்களுக்கான

உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 எப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,

[ஆசிரியர்]

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணு 4. (இலங்கையில் 30 சதம்) வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதாரர்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணு 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதாரர்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## "வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

# தமிழில் சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

| | |
|---|---|
| "வக்கீல்" 1953-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை ரூ | 3 12 0 |
| "வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. | 5 8 0 |
| "வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. | 4 0 0 |
| சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. | 1 4 0 |
| தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனுக்கள், குத்தகைப் பத்திர நமூனு, வார சாகுபடிப் பத்திர நமூனு உள்பட விளக்கம்] ரூ. | 0 6 0 |
| சரக்கு விற்பனைச் சட்டம் [The Indian Sale of Goods Act] ரூ. | 1 8 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்
வி. பி. பி. கிடையாது.
அணு 8 சேர்த்து அனுப்பினால்
ரிஜிஸ்டர் தபால் மூலம்
அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

**மானேஜர்,**
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S.I)

வெண்சங்கு நறுமண சீயக்காய்த் தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்–தஞ்சாவூர்..

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

மூர்த்தி ஸ்டோர்
செம்பனார்கோவில்
(மாயூரம் தாலுக்கா)

எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & இரும போன் சாமான்களும் விலை நயமாய் கிடைக்கும்.

சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.

உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

# "வக்கீல்"

## பொருள் அடக்கம்

மலர் 6 Nov-Dec. 1954 இதழ் 11

கொல்லைக் கதவு ! 5

வாழிய பிரஞ்சு மக்கள் ! 5

புதிய சட்டங்கள் 6

விதிகள் 6

* பஞ்சாயத்துச் சட்ட விதிகள்—ரஸ்தாவிலுள்ள மரங்களையோ, பஞ்சாயத்து நிலங்களிலுள்ள மரங்களையோ திருட்டுத்தனமாக வெட்டுபவர் மீது நடவடிக்கை 6

* கட்டடங்களின் ஜாகை - வாடகை கட்டுப்பாடு விதிகள் திருத்தம். வழக்குகளை வேறு கண்ட்ரோலருக்கு மாற்ற ஜில்லா கோர்ட்டுக்கு அதிகாரம். 6

* நிலவரி சர்ஜார்ஜ் விதிகள் 7

விசேஷ விவாகச் சட்டம் 8 - 15

வழக்கும் தீர்ப்பும்

* தொழில் தகராறுச் சட்டப்படி சர்க்கார் நடவடிக்கை எடுக்க "முதலாளி—தொழிலாளர்" என்ற தொடர்பு முதவில் இருக்கவேண்டும். வேலைக்கே அமர்த்திக்கொள்ளப்படாத தொழிலாளர்களுக்கும், அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளுவதாக ஒப்புக்கொண்டு ஆனால் அப்படிச் செய்யத் தவறிய முதலாளிக்கும் ஏற்படும் சச்சரவு "தொழில் தகாறு" அல்ல. 16

* பஸ்களில் பிரயாணிகளுடைய சாமான்கள் மழையில் நனைந்து போகாதிருக்க 'டார்பாலின்' எப்பொழுதும் வைத்திருக்கவேண்டுமா? சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு 18

கேள்வியும்—பதிலும் 19

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 21

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்
கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள
**பட்டு ஜவுளி தினுசுகள்**
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்:
**ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்**
**கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்**
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சு:
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
**மதுரை.**

தமிழ்நாடு ... காப்பகம்
187735
சென்னை-600 033

ஸ்தாபிதம் 1941


ரிஜிஸ்டர் நெ. 152070

ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி
PRO:- A. சின்னக்கனி நாடார், டோர் கிர். 7.
நெம்பர் 1. போலீஸ் ஸ்டேஷன் சந்து, மதுரை.

டிரேட்மார்க் நெ. 164695
**2006** ஏகாம்பரவிலாஸ் டோட்டோமார்க்
சுத்தமான சீயக்காய்தூள் பாக்கெட்டுகளை கவனித்து
வாங்குங்கள்.
எண்ணெய் குளிப்பதற்கு மிகச் சிறந்தது.
தயாரிப்பவர்கள்:
**கிருஷ்ணவிலாஸ்**
336, கீழமாசி வீதி, **மதுரை.**
M. ஏகாம்பரம் செட்டியார், புரோப்ரைட்டர்.

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்
**222** - TRADEMARK டிரேட்மார்க்
நீடித்த உழைப்பிற்கும் உறுதிக்கும் பேர்பெற்ற
**சாத்தங்குடி**
ஜவுளி தினுசுகள் விலை சகாயமாய்க் கிடைக்கு
T. P. E. **சுப்பய்யர் & சன்ஸ்**
(பெரிய விளக்குத்தூண் சமீபம்)
119 தெற்கு மாசி வீதி, **மதுரை.**

Reliable, Strong & durable
**SATHANGUDI**
Clothes Available at Cheap prices
**T. P. E. SUBBAIER & SONS**
(Near Black Burn)
119 SOUTH MASI ST, MADURAI

**1006 மங்கி மார்க்**
**2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்**
சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்
**கிருஷ்ண விலாஸ்**
**உதயகிரி விலாஸ்**
வாசனை சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பதற்கு மிகச்
சிறந்தவைகள்
தயாரிப்பவர்:—
**கிருஷ்ண விலாஸ்**
336, கீழ மாசிவீதி, **மதுரை.**
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.
**M. ஏகாம்பரம் செட்டியார்,**
புரோப்ரைட்டர்.

## "வக்கீல்" அறிவிப்பு

"வக்கீல்" பத்திரிகைக்குத் தாங்கள் அனுப்பவேண்டிய சந்தாத் தொகையைக் கீழே கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பவும்; அல்லது நேரில் ஆபீசில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும். இது முதல், மறுபடியும் இது விஷயமாக "வக்கீல்" பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் வரையில், "வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தா சேர்க்கவும், ரசீது கொடுக்கவும், தொகை வசூல் செய்யவும் வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை. "வக்கீல்" பிரசுரத்தேதி பற்றிய அறிவிப்பு இந்த இதழில் வேறு பக்கத்தில் இருப்பதை சந்தாதார்களும் ஏஜண்டுகளும் தயவு செய்து கவனிக்கவும்.

**மானேஜர்,** "வக்கீல்" தமிழ் சட்டப் பத்திரிகை,
**தபால் பெட்டி 26 : : கும்பகோணம். (S. I.)**

"வக்கீல்"

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 6 நவம்பர்—டிசம்பர் 1954 இதழ் 11

## கொல்லைக் கதவு!

ஆசியாவிற்குட்புகுந்து, வெகு நாட்களாகக் கும்மாள மடித்து வந்த ஐரோப்பியர்களை, ஒருவர் பின் ஒருவராக வெளியேற்றி, வாயிற் கதவு பூட்டப்படும் இந்நேரத்தில், உள் இருக்கும் ஒருவர் கொல்லைக் கதவைத் திறந்து விட்டார்! பாகிஸ்தானத்தின் வழியே அமெரிக்கர்கள் ஆசியாவினுள் வேகமாக உட்புகுந்து கொண்டிருக்கின்றனர்! இன்றைய பாகிஸ்தனின் சூழ்நிலை அதற்கு மிகச் சாதகமாகவும் இருக்கிறது. பாக்கிஸ்தானில் ஒரே குழப்பம். துரோகமும் அராஜகமும் அங்கே கூத்தாடுகின்றன. அரசியல் நிர்ணய சபையும் கலைக்கப் பட்டு விட்டது. பாகிஸ்தான் பிரதமர் முகமதலி அமெரிக்கா போன சமயம் பார்த்து, கவர்னர் ஜெனரல் குலாம், காலத்தை வீணுக்காமல் ஒரு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தார். அதாவது, முகமது அலி திரும்புகாலில் அவரைப் புதைப்பதற்கான ஒரு குழியை ஆழமாகத் தோண்டிக் கொண்டிருந்தார்! குழி தயாராக இருந்தும் ஏனோ முகமதலி அதில் விழவில்லை! பாக்கிஸ்தானம் பிளவுபட்டு, குழப்பமடைந்து, தலைவரின்றி, மதியிழந்து, பரிதவிக்கும் இச்சுப நாளைப் பார்த்து, அமெரிக்க யுத்த வீரர்கள் கராச்சித் துறைமுகத்தில் இறங்கிக் கொண்டே இருக்கின்றனர்!

2

## வாழிய பிரஞ்சு மக்கள்!

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எப்படிப் பிரிட்டிஷார் தமது மிகப் பெரிய இந்திய சாம்ராஜ்யத்தை மக்களிடமே ஒப்புவித்து விடைபெற்று விருந்துண்டு வெளியேறினரோ, அதேவிதமாய், அதே கண்ணியத்துடன், அதே பெருந்தன்மையுடன் பிரஞ்சு மக்களும் புதுவை, காரைக்கால், ஏனும், மாஹி இந்த ஊர்களை இந்தியாவிடமே ஒப்படைத்து விட்டு, நம்மிடம் விடை பெற்றுக்கொண்டு மனத்தாங்கலில்லாமல் சந்தோஷமாய்ச் சொந்த ஊர் போய் விட்டனர்! புரட்சி என்பதை மூன்று நூற்றுண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தவர்கள் பிரஞ்சு மக்களே. இவ்வுலகில் முதல் முதலாக ஏற்பட்ட பெரிய குடியரசு பிரான்சு தேசத்தில் தான். "சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம்" — என்ற சங்கநாதத்தை இப் பூவுலகில் முதலில் கிளப்பியது பிரஞ்சு மக்களே! பிரஞ்சு அதிகாரிகள் போய்விட்டாலும் பிரஞ்சு பாஷைக்கும் பிரஞ்சு கலா சாரத்திற்கும் இருப்பிடமாகவும் வளர்ப்பிடமாகவும் புதுச்சேரி, காரைக்கால் இரண்டும் வெகு நாட்கள் இருந்து வரும் என்பதில் நாம் பெருமை அடைகிறோம். வாழிய பிரஞ்சு மக்கள்!

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

### 1954-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

33. இந்திய வருமான வரிச்சட்டத் திருத்தம்.

Indian Income Tax Amendment Act 1954. (25-9-1954) புத்தகாலத்தில் அமித லாபங்கள் அடைந்து அதை மறைத்து வைத்திருப்பவர்களுக்கு வருமானவரி விதிப்பது பற்றி இந்திய வருமான வரிச்சட்ட ஷரத்துக்கள் ஜனாதிபதி அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட 1954 ஆம் வருடத்திய 8 ஆவது அவசரச் சட்டத்தால் சமீபத்தில் திருத்தி அமைக்கப்பட்டன. (1954-ஆகஸ்டு மாத "வக்கீல்" இதழ் பக்கம் 8-பார்க்கவும்.) அந்த அவசரச் சட்டமானது பார்லிமெண்டால் ரத்துச் செய்யப்பட்டு அதே ஷரத்துக்களைக் கொண்ட இந்தத் திருத்தச்சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது.

34. மத்திய சுங்கவரி - உப்புச் சட்டத் திருத்தம். Central Excises and salt Amendment Act 1954. [28-9-1954)

35. இந்தியத் தீர்வைப் பட்டியல் சட்டத் திருத்தம். Indian Tariff Amendment Act 1954. (28-9-1954)

37. உணவுப் பண்டக் கலப்புத் தடைச் சட்டம். Prevention of food Adulteration Act 1954. (29-9-54) இச்சட்டமானது மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதியில் அமுலுக்கு வரும். இம்மத்தியச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன், இதே விஷயத்தைப் பற்றி, சென்னை ராஜ்யத்திலும் மற்ற ராஜ்யங்களிலும் அமுலிலிருக்கும் ராஜ்யச்சட்டங்கள் ரத்தாகி விடும். உணவுப்பண்டங்களுடன் வேறு பண்டங்களைக் கலந்து கெடுத்துச் செய்யப்படும் வியாபாரத்தைத் தடை செய்வதற்காக இயற்றப்பட்டிருக்கும். இம்முக்கிய சட்டத்தின் ஷரத்துக்கள் பின்பு விவரமாக விளக்கப்படும்.

# விதிகள்

### பஞ்சாயத்துச் சட்ட விதிகள், ரஸ்தாவிலுள்ள மரங்களையோ, பஞ்சாயத்து நிலங்களிலுள்ள மரங்களையோ திருட்டுத்தனமாக வெட்டுபவர் மீது நடவடிக்கை

பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 112 (2) (xxxv) ஷரத்தில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, சென்னை சர்க்கார் ஒரு புதிய விதி இயற்றி இருக்கின்றனர். அதாவது பஞ்சாயத்து எல்லைக்குள் ரஸ்தா ஓரமாக இருக்கும் மரங்களோ, பஞ்சாயத்து நிலங்களில் உள்ள மரங்களோ, திருட்டுத்தனமாக வெட்டப்பட்டால், அது விஷயத்தை அக்கிராம பெரியதனக்காரர் (வில்லேஜ் ஹெட்மன்) ரிவின்யூ இன்ஸ்பெக்டர் மூலம் தாசில்தாருக்கு ஒரு 'ரிபோர்ட்' அனுப்பவேண்டும். அதன் நகல் ஒன்றை பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கும் அனுப்பவேண்டும். இது கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், திருட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது தாம் எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொண்டாரென்றோ, அல்லது எடுக்க உத்தேசிக்கிறார் என்றோ தாசில்தாருக்குத் தெரிவித்துவிட வேண்டும். இரண்டு வாரத்திற்குள் தாசில்தாருக்கு எவ்விதத் தகவலும் கிடைக்காவிட்டால், பஞ்சாயத்தானது அது சம்பந்தமாக ஒன்றும் செய்யவில்லை என்றும் தெரிந்து கொண்டு தாசில்தாரே அக்குற்றம் சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்வார். (17-11-1954 சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட—பாகம் I A. பக்கம் 160)

### கட்டடங்களின் ஜாகை - வாடகை கட்டுப்பாடு விதிகள் திருத்தம். வழக்குகளை வேறு கண்ட்ரோலருக்கு மாற்ற ஜில்லா கோர்ட்டுக்கு அதிகாரம்.

1949-ம் வருடத்திய சென்னை கட்டடங்களின் ஜாகை வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்தின் 17-வது செக்ஷனில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து 1951-ம் வருடத்திய கட்டட ஜாகை—வாடகைக் கட்டுப்பாடு விதிகளில் விதி 10 A என்று ஒரு புதிய விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புது விதியின் படி ஒரு 'ரெண்டு கண்ட்ரோலரி' டம் இருக்கும் வழக்குகளை எந்த

நிலைமையிலும் வேறு 'ரெண்டு கண்ட்ரோல்' ருடைய கோர்ட்டுக்கு மாற்ற ஜில்லா கோர்ட்க்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

(20-10-1954 சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்டு பாகம் II பக்கம் 138)

## சென்னை நிலவரி (ஸர்சார்ஜ்) விதிகள் (1954)

1954-ம் வருடத்திய சென்னை நிலவரி (ஸர்சார்ஜ்) சட்டத்தின் செக்ஷன் 7-ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்காரால் விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. இவ்விதிகள் 1-7-1954-ல் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும். சர்சார்ஜ் விதிக்கும் ரிவின்யூ அதிகாரியானவர் நிலச் சொந்தக்காரருக்கு நமூனு 1ன் படி ஒரு நோட்டீசு அனுப்பி அவருக்குச் சொந்தமான சென்னை ராஜ்யத்திலுள்ள நில விவரங்களையும் தீர்வை விவரங்களையும் அனுப்பும்படி கேட்பார். அந்நோட்டீஸ் கிடைத்த 15 நாட்களுக்குள் நிலச் சொந்தக்காரர் நமூனு 2ன்படி விவரங்கள் கண்ட ஒரு உறுதி மொழிக் தகவலை அந்த அதிகாரிக்கே அனுப்பிவிட வேண்டும்.

## தாமாகவும் சிலர் விவரம் அனுப்ப வேண்டும்

சென்னை ராஜ்யத்திலுள்ள அவருடைய எல்லா நிலங்களுக்காகவும் ஒரு பசலியில் ஒருவர் ரூ. 500க்கு மேல் நிலவரி கட்டவேண்டியவராக இருந்தால் அவர் தாமாகவே ஜில்லா கலெக்டருக்கு நமூனு 2ன் படி தகவல் உறுதி மொழி ஸ்டேட்மெண்டு அனுப்பி விடவேண்டும். இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். அவர் வசித்து வரும் ஜில்லாவின் கலெக்டருக்கோ, அல்லது அவருக்கு நிலம் இருக்கும் எந்த ஜில்லா கலெக்டருக்கோ, யாராவது ஒருவருக்கு இதை அனுப்பினால் போதும். ஒவ்வொரு பசலியும் ஆரம்பமான ஒரு மாதத்திற்குள் இவ் விவரம் அனுப்பப்படவேண்டும். (அதாவது ஒவ்வொரு ஜூலை மாத முடிவுக்குள் இது அனுப்பப்பட வேண்டும். இந்த பசலி சம்பந்தப்பட்ட வரையில் இவ்விதிகளை சர்க்கார் கெஜட்டில் 13-10-1954ல் தான் பிரசுரமாகி இருக்கிறது. கவனிக்கத்தக்கது.)

## சர்சார்ஜ் விதிப்பது

நிலச் சொந்தக்காரர் அனுப்பும் விவரங்கள் ரிவின்யூ அதிகாரிக்குச் சரி என்று தோன்றினால் அதற்கான சர்சார்ஜ் நமூனு 4ன் படி விதிக்கப்படும். கெடுவுக்குள் விவரம் அனுப்பாதவர்களுக்கும் அனுப்பிய விவரங்கள் சரியல்ல என்று அதிகாரியானவர் இது சம்பந்தமாக விசாரணை செய்து நமூனு 3ன் படி ஒரு தாற்காலிக் சர்சார்ஜ் விதிப்பு உத்தரவு பிறப்பிப்பார். இதற்கு நிலச் சொந்தக்காரர்களின் ஆட்சேபணைகளைக் கேட்டு சரியான சர்சார்ஜ் எவ்வளவு என்று நிர்ணயம் செய்வார். சர்சார்ஜ் எவ்வளவு என்பது நமூனு 4-ன்படி நிலச் சொந்தக் காரருக்கு அறிவிக்கப்படும்.

## ஜாயிண்டுப் பட்டா.

பல நபர்களுக்குப் பொதுவாக ஜாயிண்டுப் பட்டாவில் உள்ள நிலங்கள் சம்பந்தமாக, ஒவ்வொரு பட்டாதாரும் அதில் தம்முடைய வீத நிலத்திற்காக எவ்வளவு நிலவரி கொடுக்க வேண்டுமோ அவ்வீதாசாரப்படிக்கான நிலவரி தான் அவருடைய நிலவரிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். சர்சார்ஜ் வரியும் கிஸ்தியைப் போலவே அத்துடன் அதே கெடுக்களில் வசூல் செய்யப்படும். பசலிக் கணக்கு முடிந்தவுடன் நிலச் சொந்தக்காரர் கொடுக்க வேண்டிய சர்சார்ஜ் முடிவாக நிர்ணயம் செய்யப்படும் இவ்விஷயம் நமூனு 5-ன் படி நிலச் சொந்தக் காரருக்கு அறிவிக்கப்படும். இதன்படி நிலச் சொந்தக்காரர் இன்னும் அதிகத் தொகை கொடுக்கவேண்டியிருந்தால் அது அவரிடமிருந்து வசூலிக்கப்படும். அவரிடம் சர்க்காரால் அதிகமாக வசூல் செய்யப்பட்டிருந்தாலும் அது அவருக்கு 'ரீபண்டு' செய்யப்படும். ஸர்சார்ஜ் சம்பந்தமான விசாரணைகளை நடத்தும் ரிவின்யூ அதிகாரிகளுக்கு சாட்சிகளை சம்மன் செய்யவும் விசாரிக்கவும் தஸ்தவேஜுகளை ஏற்றுக் கொள்வதிலும்சிவில் கோர்ட்டைப் போலவே அதிகாரங்கள் உண்டு.

## ரூ. 500 வரை அபராதம்

ரிவின்யூ அதிகாரிகள் கேட்டும் 15 நாட்களுக்குள் நமூனு 2ன்படி தகவல் அனுப்பாமலிருப்பதும் ; ரூ 500-க்கு மேல் நிலவரி கொடுப்பவர்கள் பசலி ஆரம்பத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் தாமாகவே நமூனு 2ன்படி தகவல் அனுப்பாமலிருப்பதும் ; ரிவின்யூ அதிகாரிகள் அனுப்பும் சம்மன்களுக்கு ஆஜராகாமலிருப்பதும் குற்றமாகும். இக்குற்றங்களை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டோ பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டோ தான் விசாரிக்கலாம். இக்குற்றத்திற்கு ரூ 500 வரை அபராதம் விதிக்கப்படலாம். (13-10-54 சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I—பக்கம் 382)

குறிப்பு:—சென்னை நிலவரி (ஸர்சார்ஜ்) சட்டம் 1954 செப்டம்பர் "வக்கீல்" இதழில் விளக்கப்பட்டிருக்கிறது.

# விசேஷ விவாகச் சட்டம் (1954)

எந்த மதத்தினரும் இஷ்டப்பட்டால் இப்புதிய சட்டப்படி திருமணம் செய்து கொள்ளலாம். அது மட்டுமல்ல. அவரவர்களுடைய மதாசாரப்படிக்கோ, பழக்கவழக்கங்களின்படிக்கோ ஏற்கனவே திருமணம் செய்துகொண்டிருக்கும் பழைய தம்பதிகள் அவர்கள் கிழவர்களாக இருந்தாலும், குழந்தை குட்டிகளுடனிருந்தாலும், அவர்கள் இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், வேறு மதத்தினராக இருந்தாலும், அவர்களும் இச்சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களும் இச்சட்டப்படி திருமணப் 'பதிவு'—செய்து கொள்ளலாம். அப்படிப் பதிவுசெய்து கொள்வதால் ஏற்படும் லாப நஷ்டங்களையும் சௌகரியங்களையும் இடைஞ்சல்களையும் நன்ருக ஆராய்ந்து, பிறகு 'பதிவு' செய்து கொள்வதுதான் சரி. கீழே இருக்கும் சட்ட விளக்கமானது அவ்வித ஆராய்ச்சிக்கு உதவி புரியும். இச்சட்டம் 1-1-1955 முதல் அமுலுக்கு வருகின்றது.

[The Speciad Marriage Act 1954. இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1954-ஆம் வருடத்திய 43-வது மத்திய சட்டம். 9—10—1954-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 11—10-1954-ல் இந்தியா கெஜட்டிலும் 10—11—1954 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்டிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இந்திய மக்கள் எவரும் இஷ்டப்பட்டால் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய இம் முக்கிய சட்டத்தின் ஷரத்துக்களை இந்துக்களும் சரி, முஸ்லீம்களும் சரி, நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டியதாகையால், இச்சட்டம் இங்கு விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது.]

## முகவுரை

இச் சட்டத்திற்கு 1954-ஆம் வருடத்திய விசேஷ விவாகச் சட்டம் (Special Marriage Act-1954) என்று பெயர். இச்சட்டம் காஷ்மீர் தவிர அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும். இந்தியாவிற்கு வெளியே இருக்கும் இந்தியப் பிரஜைகளுக்கும் இச்சட்டம் உண்டு. இச்சட்டம் எத்தேதி முதல் அமுலுக்கு வருமென்பதை மத்திய சர்க்கார் குறிப்பிடவேண்டும்; 1-1-1955 முதல் இது அமுலுக்கு வருமென்று குறிப்பிட்டிருக்கின்றனர். 1872ஆம் வருடத்திய 3ஆவது சட்டமாகிய விசேஷ விவாகச் சட்டமானது இச் சட்டத்தால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

### எவரும் இச்சட்டப்படி திருமணம் செய்துகொள்ளலாம்

ஏற்கனவே அமுலில் இருந்த 1872ஆம் வருடத்தியச் சட்டப்படி இன்ன இன்ன மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் அச்சட்டப்படி பதிவுத் திருமணஞ்செய்து கொள்ளலாமென்று ஒரு நிபந்தனை இருந்தது. இச்சட்டத்தில் அது இல்லை. அதாவது இந்தியாவில் எந்தத் தம்பதிகளும் இஷ்டப்பட்டால் இச்சட்டத்தில் கண்ட முறைப்படி திருமணம் செய்து கொள்ளலாம். அதாவது மணமகன் எந்த மதத்தைத் தழுவினவராக இருந்தாலும் சரி; மணமகள் அதே மதத்தையோ வேறு மதத்தையோ தழுவினவளாக இருந்தாலும் சரி; அல்லது அவர்களில் ஒருவரோ, இருவருமோ, எந்த மதத்தையும் தழுவாதவர்களாக இருந்தாலும் சரி, அவ்விருவர்களும் இச்சட்டத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து இதன்படி திருமணம்செய்து கொள்ளலாம். மற்றொரு விஷயமும் இங்கு கவனிக்கத் தக்கது. இச்சட்டப்படிதான் இனி எவரும் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற வலுக்கட்டாயம் இல்லை. இந்துக்களோ, முஸ்லீம்களோ அவரவருடைய மதாசாரப்படிக்கும் தொன்றுதொட்ட பழக்க வழக்கங்களின்படிக்கும் எப்போதும்போலவே, திருமணங்கள் செய்து கொள்வதை இச்சட்டம் தடுக்கவில்லை. அவ்விதத் திருமணங்கள் எப்போதும் போலவே சட்ட பூர்வமானவைகளே. அவை செல்லும். ஆனல் அவரவர்களுடைய சொந்தச் சட்ட திட்டங்களின்படித் திருமணம் செய்துகொண்ட பழைய தம்பதிகளும் இஷ்டப்பட்டால் இச் சட்டப்படி தங்களுடைய திருமணத்தைப் பதிவு செய்தும் கொள்ளலாமென்று ஒரு ஷரத்து இருக்கின்றது. அதைப் பின்புகவனிப்போம்.

### யார் இச்சட்டப்படி திருமணம் செய்து கொள்ளலாம்

இச்சட்டப்படி தங்கள் திருமணத்தைச்செய்து கொள்ள விரும்பும் தம்பதிகள் அடியில் கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவர்களாக இருக்க வேண்டும்.

அவையாவன:—(1) அச்சமயத்தில் மணமகனுக்கு உயிருடன் இருக்கும் மனைவியோ, மணமகளுக்குக் கணவனே இருக்கக் கூடாது. உதாரணமாக ஒரு மனைவி உயிருடனிருக்கும் போது, கணவன் இச்சட்டப்படி இரண்டாவது மனைவியை மணந்துகொள்ள முடியாது.

(2) இருவரில் எவரும் பேதை (idiot)யாகவோ, பைத்தியமாகவோ (lunatic) இருக்கக் கூடாது. (3) மணமகனுக்கு 21 வயது பூர்த்தியாகியும், மணமகளுக்கு 18 வயது பூர்த்தியாகியும் இருக்க வேண்டும். (4) மணமகனும், மணமகளும் ஒருவருக்கொருவர் தடைப்பட்ட உறவு முறை உள்ளவர்களாக (within degrees of prohibited relationship) இருக்கக்கூடாது. எந்தெந்த உறவுமுறைகள் தடைப்பட்டிருக்கின்றன என்று இச்சட்டத்தின் 1ஆவது ஷெடியூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தடைப்பட்ட உறவு முறை கடைசியில் விளக்கப்பட்டிருக்கிறது கவனிக்கவும் (5) இந்தியாவுக்கு வெளியே இச்சட்டப்படி திருமணம்செய்து கொள்ள விரும்பும் தம்பதிகள் இந்தியப் பிரஜைகளாக இருக்கவேண்டும். (செக்ஷன் 4.)

## இச்சட்டப்படி திருமணம் செய்துகொள்ள இஷ்டப்படுகின்றவர்கள் முதலில் என்ன செய்யவேண்டும்

இச்சட்டப்படி தங்களுக்குள் திருமணம் செய்துகொள்ள உத்தேசம் செய்திருப்பவர்கள் இருவரும் சேர்ந்து, இச்சட்டத்தின் இரண்டாவது ஷெடியூலில் கண்டிருக்கும் நமூனாப்படி ஒரு 'நோட்டீஸ்' எழுதி அதை ஜில்லா 'திருமண அதிகாரி' (Marriage Officer) என்ற அதிகாரிக்கு அனுப்பவேண்டும். நோட்டீஸ் தேதிக்கு முன்பு அவ்விருவர்களில் ஒருவரேனும் எங்கே வசித்து வந்திருக்கிறாரோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ஜில்லா திருமண அதிகாரிக்கு மேற்கண்ட நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அவ்வதிகாரி இந்த நோட்டீசைத் தம்முடைய ஆபீஸ் ரிகார்டுகளுடன் வைத்திருக்க வேண்டும். மேலும் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் திருமண அறிவிப்புப் புத்தகத்திலும் (Marriage Notice Book) இந்நோட்டீசின் நகலை எழுதி வைக்கவேண்டும். இப்புத்தகத்தை எவரும் நியாயமான காலங்களில், எவ்விதக் கட்டணமுமில்லாமல், படித்துப் பார்க்கலாம். நோட்டீசின் நகல் ஒன்று அவ்வதிகாரியின் ஆபீசிலும் பிரசுரம் செய்யப்படும். தம்பதிகளில் எவராவது, அவ்வதிகாரியின் அதிகார எல்லைக்குள் வசிக்காமல் வேறு இடத்தில் ஸ்திரவாசமுள்ளவராக இருந்தால், அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள திருமண அதிகாரிக்கு நோட்டீஸ் நகல் ஒன்று அனுப்பபடும். அவ்வதிகாரி இதைத் தம்முடைய ஆபீசில் பிரசுரம் செய்வார். (செக்ஷன் 6.)

## ஆட்சேபனை

மேற்கண்டபடி நோட்டீஸ் பிரசுரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் எவரும் இத்திருமணத்தை ஆட்சேபிக்கலாம். அதாவது செக்ஷன் 4ல் கண்ட நிபந்தனைகளை இத்திருமணத் தம்பதிகள் பூர்த்தி செய்யவில்லை என்று ஆட்சேபிக்கலாம்.

உதாரணமாக;—உத்தேசத் திருமண மணமகனுக்கு 21 வயது பூர்த்தியாகவில்லை என்றோ, அல்லது மணமகளுக்கு 18 வயது பூர்த்தியாக வில்லை என்றோ ஆட்சேபிக்கலாம். அல்லது மணமகனோ மணமகளோ பைத்தியம் என்று ஆட்சேபிக்கலாம். திருமண நோட்டீசுத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் யாதொரு ஆட்சேபனையும் வாராவிட்டால், அத்தம்பதிகளின் திருமணத்தை இச்சட்டப்படி நடத்திப் பதிவு செய்துகொள்வார்கள். ஆட்சேபனை இருந்தால், ஆட்சேபனை செய்பவர்கள் சொல்லும் ஆட்சேபனைகளைத் திருமண அதிகாரியானவர் திருமண அறிவுப்புப் புத்தகத்தில் பதிந்துகொண்டு, அதை மறுபடியும் ஆட்சேபனை செய்பவருக்கு விளக்கிக் காட்டி, ஆட்சேபனைதாரின் கையெழுத்தையும் அதில் வாங்கிக்கொள்ளுவார். ஆட்சேபனைத் தேதி முதல் 30 நாட்களுக்குள் திருமண அதிகாரியானவர் விசாரணை செய்து ஆட்சேபனைகளைப்பற்றி முடிவுசெய்து, ஆட்சேபனைகள் சரி அல்ல என்று அவருக்குத் தோன்றினால், அவர் திருமணத்தைப் பதிவு செய்து கொள்வார். ஆட்சேபனை சரி என்று அவர் ஏற்றுக்கொண்டால் அத்திருமணத்தை நடத்திப் பதிவுசெய்து கொள்ள முடியாதென்று மறுத்து விடுவார். மணமகனோ, மணமகளோ 30 நாட்களுக்குள் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். ஜில்லா ஜட்ஜ் செய்யும் உத்தரவு தான் முடிவானது. அதன்படி திருமண அதிகாரி நடக்கவேண்டும். (செக்ஷன் 8.)

திருமண அதிகாரியானவர் ஆட்சேபனைகளைப் பற்றி விசாரணை செய்யும்போது சாட்சிகள் விசாரிக்கவும் தஸ்தவேஜுகள் ஏற்றுக்கொள்ளவும் சிவில் கோர்ட்டைப் போலவே அவருக்கு அதிகாரமுண்டு (செக்ஷன் 9.)

## காரணமில்லாமலும் நல்லெண்ணமில்லாமலும் ஆட்சேபனை செய்பவர்கள் ரூ. 1000 வரை தம்பதிகளுக்கு நஷ்ட ஈடுகொடுக்க நேரிடும்.

திருமணத்திற்கு ஆட்சேபனை செய்பவர் காரணமில்லாமலும், நல்லெண்ணமில்லாமலும் ஆட்சேபனை செய்ததாகத் திருமண அதிகாரிக்குத் தோன்றினால், அவர் அவ்விதம் ஆட்சேபனை செய்பவர் நஷ்டஈடாக ரூ. 1000க்கு அதிகப்படாத தொகையைச் செலவு தொகையாகக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவிடலாம். அத்தொகை பூராவையுமோ ஒரு பாகத்தையோ தம்பதிகளுக்கு நஷ்டஈடாகக் கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவிட அதி

காரமுண்டு. அவருடைய உத்தரவை ஜில்லா கோர்ட்டின் உத்தரவைப் போல நிறைவேற்றிச் செலவு தொகையும் வசூலிக்கப்படலாம்.

## திருமண வைபவம்

திருமணத்தைப்பற்றி ஒருவருக்கும் ஆட்சேபனை இல்லாவிட்டாலும், ஆட்சேபனைகள் இருந்து அவை நிராகரிக்கப்பட்டாலும், பிறகு இச்சட்டப்படிக்கான திருமணம் நடக்கும். அதாவது திருமண அதிகாரியின் ஆபீஸிலேயேத் திருமணம் நடந்தாலும் நடக்கலாம், அல்லது ஆபீஸிலிருந்து அதிக தூரமில்லாத வேறு இடத்தில் திருமணம் நடத்தத் தம்பதிகள் இஷ்டப்பட்டாலும் அப்படியும் செய்யலாம். அங்கே திருமண அதிகாரியைக் கூப்பிட்டுப் போகலாம். இப்படிச் செய்ய அதிகக் கட்டணம் உண்டு. திருமணத் தம்பதிகள் இருவரும் மூன்று சாட்சிகளும் திருமண அதிகாரியின் முன்பு உறுதி மொழிக் கையெழுத்துப் போடவேண்டும். உறுதிமொழி என்ன என்பது இச்சட்டத்தின் 3 ஆவது ஷெட்யூலில் கண்டிருக்கிறது. அதாவது மணமகன் கையெழுத்துப்போட வேண்டிய உறுதிமொழியில் (1) எனக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. (அல்லது என் மனைவி இறந்துவிட்டாள், அல்லது என் மனைவிக்கும் எனக்கும் விவாக ரத்தாகிவிட்டது.) (2) எனக்கு 21 வயது பூர்த்தியாகிவிட்டது. (3) நானும் மணமகளும் தடைப்பட்ட உறவு முறை உள்ளவர்கள் அல்ல. (4) இந்த உறுதி மொழியிலிருப்பது பொய்யாக இருந்தாலும் சரி, உண்மை என்று நான் நம்பாமலிருந்தாலும் சரி எனக்குச் சிறைத்தண்டனையும் அபராதத் தண்டனையும் விதிக்கப்படுமென்பது எனக்குத் தெரியும்." என்று இருக்கும் உறுதி மொழியில் மணமகன் கையெழுத்திட வேண்டும். அதைப் போலவே மணமகள் தனக்கு 18 வயது பூர்த்தியாகி விட்டதென்றும் மேலே கண்ட மற்ற விஷயங்களையும் கண்டு உறுதிமொழிக் கையெழுத்துப் போடவேண்டும். "எங்களுக்குத் தெரிந்த வரையில் இத்திருமணத்திற்குச் சட்ட பூர்வமான எவ்விதத் தடையுமில்லை"—என்ற உறுதிமொழியில் மூன்று சாட்சிகளும் கையெழுத்துப் போடவேண்டும். கடைசியில் திருமண அதிகாரியானவர் தம்முடைய கையெழுத்தைப் போடுவார். திருமண அதிகாரி, மூன்று சாட்சிகள் இவர்களுடைய முன்னிலையில் மணமகன் மணமகளைப் பார்த்து "நான் உன்னை சட்ட பூர்வமான என் மனைவியாக ஏற்றுக் கொள்ளுகிறேன்"—என்றும், மணமகள் மணமகனைப் பார்த்து "நான் உம்மை சட்ட பூர்வமான என் கணவனாக ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்றும் சொல்லவேண்டும். இது மிக அவசியமான திருமந்திரம். தம்பதிகள் விரும்பும் எவ்விதமான சடங்குகள் மூலம் தங்களுடைய திருமணத்தை அவர்கள் செய்துகொண்டாலும், திருமண அதிகாரிக்கும் மூன்று சாட்சிகளுக்கும் முன்னிலையில், மேலே கண்டபடி தம்பதிகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளாவிட்டால், அத்திருமணம் முடிவுபெற்றதாகாதென்றும், தம்பதிகளை அது கட்டுப்படுத்தாதென்றும் செக்ஷன் 12 (2)ல் வியக்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுவது தம்பதிகளுக்குப் புரிந்த எந்தப் பாஷையிலுமிருக்கலாம்.

திருமணம் இவ்விதம் முடிந்தவுடன் திருமண அத்தாட்சிப்புத்தகத்தில் (Marriage Certificate Book) நமூனாப்படி திருமண அதிகாரியானவர் பதிவு செய்து, அதில் தம்பதிகளும் மூன்று சாட்சிகளும் கையெழுத்துப் போடுவார்கள். இதுதான் திருமணத்தை ருசுப்பிக்கும் முக்கிய தஸ்தவேஜாகும்.

திருமண நோட்டீசுத் தேதியிலிருந்தோ, ஆட்சேபனைகளிலிருக்கும்போது ஜில்லா ஜட்ஜின் அப்பீல் தீர்ப்புத் தேதியிலிருந்தோ மூன்று மாதங்களில் திருமணம் நடக்காவிட்டால், மறுபடியும் அதேமுறைப்படி நோட்டீஸ் கொடுத்துத்தான் திருமணம் நடத்திக்கொள்ள முடியும்.

## வேறுமுறைப்படி திருமணமானவர்களும் இச்சட்டப்படி பதிவு செய்து கொள்ளலாம்.

இச்சட்டப்படிக்கோ, 1872 ஆம் வருடத்தியச் சட்டப்படிக்கோ திருமணம் செய்துகொள்ளாதவர்களும் இச்சட்டத்தேதிக்கு முன்போ, பிறகோ வேறு முறைப்படி திருமணம் செய்துகொண்டிருந்தாலும், அவர்கள் இஷ்டப்பட்டால் இச்சட்டப்படிக்கும் திருமணப் பதிவு செய்துகொள்ளலாம். ஆனால் அவ்விதம் பதிவு செய்துகொள்ள, கீழ்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகி இருக்கவேண்டும். அவையாவன:— (1) அத்தம்பதிகளின் திருமணம் முறைப்படி நடந்திருக்க வேண்டும்; தவிர அதுமுதல் அவர்கள் கணவன் மனைவியாகச் சேர்ந்து வசித்திருக்க வேண்டும் (2) பதிவு செய்து கொள்ளும் காலத்தில் கணவனுக்கு அம்மனைவி தவிர வேறு மனைவிகள் இருப்பது கூடாது. அதைப்போலவே அச்சமயத்தில் மனைவிக்கும் அக்கணவனைத் தவிர வேறு கணவன் இருக்கக்கூடாது. (3) பதிவு செய்துகொள்ளும் சமயத்தில் தம்பதிகள் எவரும் பேதையாகவோ பைத்தியமாகவோ இருக்கக்கூடாது. (4) தம்பதிகள் இருவருக்கும் பதிவு செய்து கொள்ளும் சமயத்தில் 21 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். (5) தம்பதிகள் தடுக்கப்பட்ட உறவுமுறை உள்ளவர்களாகவும் இருக்கக்கூடாது. ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு நடந்த திருமணங்கள் சம்

பந்தப்பட்டவரையில், அவ்வித உறவு முறைக் காரர்களுக்குள் செய்து கொள்ளும் திருமணம் செல்லுபடியுள்ளதாக இருந்தால் அத்தம்பதிகளும் இச்சட்டப்படி பதிவு செய்து கொள்ளலாம். (6) பதிவு செய்து கொள்ள மனுப்போடுவதற்கு முன்பு, 30 நாட்களுக்குக் குறையாமல் அந்த ஜில்லா திருமண அதிகாரியின் எல்லைக்குள் தம்பதிகள் வசித்து வந்திருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியானால், இச்சட்டத்திற்கு முன்போ, பிறகோ, திருமணமான தம்பதிகளும் இச்சட்டப்படி நியமிக்கப்பட்டிருக்கும் திருமண அதிகாரிக்கு மனுப்போட்டு தங்களுடைய திருமணத்தையும் பதிவு செய்து கொள்ளலாம். திருமண அதிகாரிக்குத் தம்பதிகள் இருவரும் சேர்ந்து இதற்காக மனுப்போட வேண்டும். இ மனு விஷயமும் அவ்வதிகாரியால் பிரசுரம் செய்யப்படும். இதற்கும் 30 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்ய விருப்புறவர்கள் ஆட்சேபனை செய்யலாம். ஆட்சேபனைகளை விசாரித்தும், மேலே கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகி இருந்தால் இத்திருமணத்தையும் திருமண அதிகாரியானவர் பதிவு செய்து கொள்வார். திருமண அத்தாட்சிப் புத்தகத்தில் 5ஆவது ஷெடியூலில் கண்ட நமூனாப்படி தம்பதிகளும் மூன்று சாட்சிகளும் கையெழுத்துச் செய்யவேண்டும்.

திருமண அதிகாரி பதிவு செய்ய மறுத்தால் 30 நாட்களுக்குள் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பே முடிவானது. அதன்படி திருமண அதிகாரி நடக்க வேண்டும். (செக்ஷன், 15, 16, 17,) பழைய தம்பதிகள் இச்சட்டப்படி தங்களுடைய திருமணத்தைப் பதிவு செய்து கொண்டு விட்டால் அப்பதிவுத் தேதி முதல் இச்சட்டப்படி அவர்கள் திருமணம் செய்து கொண்டிருந்தால் எப்படியோ அதே நிலைமை ஏற்படும். இது என்ன என்பது கீழே விளக்கப்பட்டிருக்கிறது.

## இச்சட்டப்படி திருமணம் செய்து கொள்வதால் ஏற்படும் நிலைமை

பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இச்சட்டப்படி திருமணம் செய்து கொண்டால், அத்திருமணத்தாலேயே அவர் பொதுக் குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டவராவார். அதாவது 'அவிபக்த'ராக இருந்தவர் 'விபக்தர்' ஆவார். ஆனால் அவருக்கு முன்பு இருந்தது போலவே வேறு ஒருவருடைய சொத்தில் வார்சு பாத்தியங்கள் இருக்கும். புத்த, சீக்கிய, ஜைனப் பொதுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அப்படியே, மேலும் இச்சட்டப்படி திருமணம் செய்து கொண்டவர்கள் இறந்து போனால் அவர்களுக்கு இந்திய வார்சுரிமைச் சட்டப்படி (Indian Succession Act 1925) வார்சுபாத்தியம் நிர்ணயம் செய்யப்படும். இச்சட்டப்படி திருமணம் செய்து கொண்டவர்களுடைய மக்களுக்கும் இந்திய வார்சுரிமைச் சட்டப்படியேதான் வார்சுப் பாத்தியம் நிர்ணயம் செய்யப்படும்.

187735

உதாரணமாக:— பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இச்சட்டப்படி திருமணம் செய்து கொண்டால், அது முதல் அவர் பொதுக்குடும்பத்தை விட்டுப் பிரிந்து போனவராகப் பாவிக்கப்படுவார். அவர் இறந்தால் அவருக்கு இந்துச்சட்டப்படி வார்சுப் பாத்தியம் நிர்ணயம் செய்யப்படமாட்டாது. இந்திய வார்சுரிமைச் சட்டப்படி அவருடைய சொத்துக்களுக்கு யார் யார் வார்சுகளோ அவர்கள்தான் அவருடைய சொத்துக்களை அடைவார்கள்.

## தாம்பத்திய உரிமைகளை வற்புறுத்துவது பற்றி

தகுந்த காரணமில்லாமல் மனைவி கணவனுடன் தாம்பத்திய வாழ்க்கை நடத்தாமல் விலகிக்கொண்டிருந்தால், தாம்பத்திய வாழ்க்கையைத் திரும்ப அடைய வேண்டுமென்று கணவன் மனுப்போடலாம். அதைப்போலவே கணவனானவர் மனைவியுடன் தாம்பத்திய வாழ்க்கை வாழாமல் விலகி இருந்தாலும் மனைவியானவள் தாம்பத்திய வாழ்வைத் திரும்ப அடைவதற்காக மனுப்போடலாம். இம்மனு ஜில்லா கோர்ட்டில் போடப்பட வேண்டும். ஜில்லா ஜட்ஜானவர் மனுவில் கண்டிருக்கும் விஷயங்கள் உண்மையா என்று விசாரணை செய்து, சட்டபூர்வமான தடை ஒன்றுமில்லாவிட்டால், அத்தம்பதிகள் தாம்பத்திய வாழ்க்கை திரும்ப நடத்த வேண்டுமென்று (Restitution of Conjugal rights) தீர்ப்புச் செய்யலாம். (செக்ஷன் 22)

## பிரிந்து வசித்து வர கோர்ட் உத்தரவு

கணவனோ, மனைவியோ, மற்றவரை விட்டுப் பிரிந்து தனியே வாழ்க்கை நடத்த வேண்டுமென்று கோரி ஜில்லா கோர்ட்டுக்கு மனுப் (Petition for Judicial Separation) போடலாம். எந்த எந்தக் காரணங்களைக் கொண்டு விவாகரத்துச்செய்து கொள்ளலாமோ, அதே காரணங்களைக்காட்டி இம்மனுப் போடலாம். அல்லது தாம்பத்திய வாழ்க்கை திரும்ப நடத்த வேண்டுமென்ற கோர்ட் உத்தரவின்படி நடக்கவில்லை என்ற காரணத்தைக் கொண்டும் இம்மனுப் போடலாம். ஜில்லா ஜட்ஜ் மனுவில் கண்டிருக்கும் விஷயங்கள் உண்மையா என்பதைப்பற்றி விசாரணை செய்து, தம்பதிகள் பிரிந்து வசிக்கலாமென்று தீர்ப்புச் செய்யலாம். இவ்விதம் தீர்ப்பு ஏற்பட்ட பிறகு மனுதார் மற்றவருடன் தாம்பத்திய வாழ்க்கை நடத்த

வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால் தம் பதிகளில் எவரும் பிறகு ஏற்பட்ட சந்தர்ப்பங்களைக் கொண்டு அத்தீர்ப்பை ரத்துச் செய்து விடவேண்டுமென்றும் கோரி மனுப்போடலாம். (செக்ஷன் 23)

## ஆரம்பத்திலிருந்தே செல்லாத திருமணங்கள்

எந்த எந்த நிபந்தனைகள் பூர்த்தியாகி இருந்தால்தான் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து இச்சட்டப்படி திருமணம் செய்து கொள்ளலாமென்று முன்பு விளக்கப்பட்டது. (செக்ஷன் 4) இந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாமலிருக்கும் போதே எக்காரணத்தைக் கொண்டோ, தவறுதலாலோ மோசடியாகவோ, தம்பதிகள் இச்சட்டப்படி திருமணம் செய்து கொண்டு விட்டால் அத்திருமணமே செல்லாது. அத்திருமணம் செல்லாதெனக் கோர்ட்டில் தாவா செய்தும் தீர்ப்பு வாங்கிக் கொள்ளலாம். அதாவது திருமணத்தின் போது (1) கணவனுக்கு வேறு ஒரு மனைவி உயிருடன் இருந்திருந்தாலும் மனைவிக்கு வேறு கணவன் இருந்திருந்தாலும் (2) கணவனோ மனைவியோ பேதையாகவோ பைத்தியமாகவோ இருந்திருந்தாலும் (3) மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாகதிருந்தாலும் (4) மணமகன் மணமகள் இருவரும் ஒருவருக்கொருவர் தடுக்கப்பட்ட உறவு முறை உள்ளவர்களாக இருந்தாலும்— தம்பதிகள் இச்சட்டத்தில் கண்ட முறையைப் பின்பற்றி, 'திருமணம்' என்று செய்து கொண்டிருந்தாலும் அது செல்லாது. மேலும் திருமண காலத்தில் மணமகன் ஆண்மையற்றவராக (Impotent) இருந்தால் அத்திருமணம் செல்லாதென மனைவி தாவா செய்யலாம். ஆனால் தாவா போடும் காலத்திலும் கணவன் அவ்விதமே இருந்தால்தான் திருமணம் செல்லாதெனத் தீர்ப்பு ஏற்படும். மனைவியும் திருமணகாலத்திலும் தாவா போடப்படும் காலத்திலும் பெண்தன்மையற்றவளாக இருந்தால் அத்திருமணம் செல்லாதெனக் கணவனும் தாவா செய்யலாம். வேறு முறையில் அச்சட்டத்திற்கு முன்போ, பிறகோ திருமணம் செய்து கொண்டவர்கள் இச்சட்டப்படி அத்திருமணத்தைப் பதிவுசெய்து கொள்ளலாமென முன்பு (செக்ஷன் 15ல்) கூறப்பட்டது. அத்திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளுவதற்காக, செக்ஷன் 15 (a) to (e)ல் கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாமலிருக்கும் போது அதைப் பதிவு செய்திருந்தாலும், அப்பதிவு (Registration of marriage) செல்லாதெனக் கோர்ட்டில் தாவா செய்யலாம். ஆனால் அவர்கள் பதிவுக்கு முன் செய்து கொண்ட திருமணமே செல்லுமா செல்லாதா என்பதைப்பற்றி இச்சட்ட ஷரத்து பாதிக்காது.

மேலும் இவ்விதத் திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளுவதைப்பற்றி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் ஏற்பட்டு ஜில்லா ஜட்ஜ் தீர்ப்புச் செய்திருந்தால், அத்தீர்ப்பின்படி பதிவு செய்து கொள்ளப்பட்ட பதிவை ரத்துச் செய்ய முடியாது. (செக்ஷன் 24)

## வேறுசில சந்தர்ப்பங்களிலும் திருமணத்தைக் கோர்ட் மூலம் ரத்துச் செய்து கொள்ளலாம்.

அதாவது:— (1) தம்பதிகளில் எவராவது ஸ்திரீ புருட சம்போகம் வைத்துக் கொள்ள முடியாதென வேண்டுமென்று மறுத்தாலும் சரி (2) திருமணகாலத்திலேயே மணமகளானவள், மணமகனல்லாது வேறு ஒருவர் மூலம் கர்ப்பம் தரித்திருந்தாலும் சரி (3) நிர்ப்பந்தம் அல்லது மோசடி மூலம் திருமண சம்மதம் பெற்றிருந்தாலும் சரி - இத்திருமணத்தை ரத்துச் செய்ய கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. ஆனால் திருமண சமயத்தில் மணமகள் வேறு ஒருவர் மூலம் கர்ப்பம் தரித்திருக்கிறாள் என்ற விஷயம் அப்போது மணமகனுக்குத் தெரியாமலிருக்க வேண்டும்; தவிர, திருமணத் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அத்திருமணம் செல்லாதென கணவன் தாவா தொடரவேண்டும்; மேலும், மனைவி வேறு ஒருவர் மூலம் கர்ப்பமாகி இருக்கிறாள் என்ற விஷயம் தனக்குத் தெரிந்த பிறகு கணவன் மனைவியுடன் சம்போகம் செய்யாதிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் கணவன் அக்காரணத்தைக் கொண்டு தாவா செய்து திருமணத்தை ரத்துச் செய்து கொள்ளமுடியும்.

திருமண சம்மதமானது நிர்ப்பந்தத்தின் பேரில் வாங்கப்பட்டதென்று சொன்னால், நிர்ப்பந்தம் நீங்கிய தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளும்; திருமண சம்மதமானது மோசடியாக வாங்கப்பட்டதென்று சொன்னால், அம்மோசடி தெரிய வந்த தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளும்தான் அக்காரணங்களைக் கொண்டு திருமணத்தை ரத்துச் செய்யத் தாவா செய்யலாம். மேலும் நிர்ப்பந்தம் நீங்கிய பிறகோ; மோசடி கண்டு பிடிக்கப்பட்ட பிறகோ கணவனோ, மனைவியோ மனப்பூர்வமான சம்மதத்துடன் ஒன்றாக வசித்து வந்திருந்தாலும் தாவா போடமுடியாது. (செக்ஷன் 25) திருமணம் செல்லாவிட்டாலும் குழந்தைகளுக்குச் சட்ட பூர்வமான பாத்தியங்கள் உண்டு.

## விவாக ரத்து

கீழே கண்ட காரணங்களினால் விவாகரத்துச் செய்யப்பட வேண்டுமென்று கோரி கணவனோ மனைவியோ ஜில்லா கோர்ட்டுக்கு மனுப்போடலாம். விவாகரத்துச் செய்து கொள்வதற்கான

காரணங்களாவன:—(1) திருமணம் நடந்த பிறகு எதிர்மனுதார் வேறு ஒருவருடன் விபசாரம் செய்தாலும் (2) மனுத்தேதிக்கு முன்புள்ள மூன்று வருடங்களாகவோ, அதிகமாகவோ, காரணமின்றி எதிர்மனுதார் மனுதாரரை விட்டு விட்டுப் போய்விட்டாலும் (3) குற்றங்களைப் பற்றிய இந்தியன் பீனல்கோடு என்ற சட்டப்படிக்கான குற்றம் செய்ததற்காக எதிர் மனுதார் ஏழு வருடம் அதற்கு மேலான தண்டனை அடைந்து அத்தண்டனையை அனுபவித்து வந்தாலும் (4) திருமணம் ஏற்பட்ட பின் மனுதாரரை எதிர்மனுதார் குரூரமாக நடத்தியிருந்தாலும் (5) மனுத்தேதிக்குக் குறைந்தது மூன்று வருடத்திற்கு முன்பு முதலே எதிர் மனுதார் தொடர்ந்தும் நிவர்த்திக்க முடியாதபடி புத்தி சுவாதீனமற்றிருந்தாலும் (6) அதே கால அளவுக்கு எதிர் மனுதார் மேக வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும் (இவ்வியாதியானது மனுதாரிடமிருந்து பரவியதாக இருக்கக் கூடாது.) (7) அதே கால அளவுக்கு எதிர்மனுதார் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும், (இதுவும் மனுதாரிடமிருந்து பரவியதாக இருக்கக் கூடாது) (8) எதிர் மனுதார் உயிருடன் இருப்பதாக மனுத்தேதிக்கு முன்புள்ள ஏழு வருடகாலமாகவோ அதற்கு அதிகமாகவோ கேள்விப் படாமல் இருந்தாலும்; (எதிர்மனுதார் உயிருடனிருந்தால் அது விஷயம் கிரமமாக யார் யாருக்குத் தெரிந்திருக்கலாமோ அவர்கள் மேற்கண்ட கால அளவுக்கு எதிர் மனுதார் உயிருடன் இருப்பதாகக் கேள்விப்படாமலிருக்கவேண்டும்.) (9) கோர்ட்டுமூலம் தம்பதிகள் பிரிந்து வசிக்கலாமென்ற டிக்ரி (decree for Judicial Separation) ஏற்பட்ட பிறகு இரண்டு வருடங்களுக்கோ அதிக காலத்திற்கோ எதிர் மனுதார் மனுதாருடன் ஸ்திரீ புருட சம்பந்தம் வைத்துக் கொள்ளாமலிருந்தாலும் (10) தாம்பத்திய உரிமைகள் திரும்ப அனுபவிக்க வேண்டுமென்றது கோர்ட் மூலம் டிக்ரி (Decree for Restitution of Conjugal rights) ஏற்பட்டு, இரண்டு வருடங்கள் அல்லது அதிக காலமாகியும் எதிர்மனுதார் அவ்விதம் செய்யத் தவறிவிட்டாலும் மேலே கண்ட பத்துக் காரணங்களில் எது இருந்தாலும் கணவன் மனைவி மீதோ அல்லது மனைவி கணவன் மீதோ விவாக ரத்துச் செய்து கொள்ள மனுப் போடலாம்.

## தம்பதிகள் இருவரும் சம்மதித்தும் விவாக ரத்துச் செய்து கொள்ளலாம்.

கணவன் மனைவி இரண்டுபேரும் சேர்ந்து விவாக ரத்துக் கோரி ஜில்லா கோர்ட்டுக்கு மனுப்போடலாம். கணவனும் மனைவியும் ஒரு வருடமாகவோ அதிக காலமாகவோ தனித்தனியாக வசித்து வந்திருப்பதாலும்; சேர்ந்து வசித்தவர அவர்களால் முடியாதென்றும் ஆகையால் தங்களுடைய விவாகத்தை ரத்துச் செய்து கொள்ள இருவரும் சம்மதித்திருப்பதாகவும் காரணம் காட்டினால் தான் இவர்கள் சேர்ந்து விவாகரத்து மனுப் போடலாம். இம்மனுப் போட்டு ஒரு வருடம் முடியும் வரையில் கோர்ட்டில் யாதொரு மேல் நடவடிக்கையும் நடைபெறாது. மனுப்போட்டு ஒருவருடம் சென்றபின் ஆனால் இரண்டு வருடம் ஆவதற்குள் மனுவை மேல் நடத்தும்படி கணவன் மனைவி இருவரும் மறுபடியும் கேட்டுக் கொண்டால், மனுவை ஜில்லா ஜட்ஜ் விசாரிப்பார். மனுதார்களுடைய திருமணம் இச்சட்டப்படி நடந்த திருமணமென்றும், மனுவில் கண்டிருக்கும் விஷயங்கள் உண்மை என்றும் நீதிபதி முடிவுசெய்தால் 'விவாக ரத்து'ச் செய்யப்படும். மனுவை மனுதார்கள் வாபீசும் வாங்கிக் கொள்ளலாம்.

## திருமணம் நடந்த மூன்று வருடங்களுக்குள் 'விவாகரத்து' மனுப் போடமுடியாது

இச்சட்டப்படி திருமணமானது திருமண அத்தாட்சிப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடங்கள் முடிவதற்குள் 'விவாக ரத்து' மனுப்போட முடியாது.

இருந்தாலும் சில விசேஷ சந்தர்ப்பங்களில் ஜில்லா கோர்ட்டாரின் அனுமதி பெற்று மூன்று வருடங்களுக்குள்ளேயே விவாகரத்து மனுப்போடவும் முடியும். அதாவது மனுதாருக்கு ஒரு விசேஷமான துன்பம் ஏற்படக் கூடியதாக இருந்தாலும், அல்லது எதிர்மனுதார் அமிதமான துர் நடத்தையுள்ளவராக இருந்தாலும், மூன்று வருடங்களுக்குள்ளாகவே விவாகரத்து மனுப் போடுவதை ஜில்லா ஜட்ஜ் அனுமதிக்கலாம்.

## விவாக ரத்துச் செய்து கொண்டவர்களின் மறுமணம்

விவாகரத்து டிக்ரி ஏற்பட்டு ஒரு வருடம் கடந்த பிறகுதான் விவாக ரத்துச் செய்து கொண்ட ஆணோ, ஸ்திரீயோ, மறுமணம் செய்து கொள்ளலாம். அப்பீல் இருந்தால் அப்பீல் தீர்ப்புத் தேதியிலிருந்தும், அப்பீல் செய்வதற்கான கெடுத் தேதியிலிருந்து ஒரு வருடம் ஆன பிறகுதான் மறுமணம் செய்து கொள்ளமுடியும்.

## குழந்தைகள்

கணவனுக்கும் மனைவிக்கும் விவாக ரத்து ஏற்பட்டாலும் விவாக ரத்து ஏற்படுமுன் அவர்களுக்குண்டான குழந்தைகளைப்பற்றி, அதாவது அக்குழந்தைகள் யாரிடம் இருக்கவேண்டும், அவர்களை யார் போஷிப்பது, அக்குழந்தைகளுடைய கல்வி விஷயமாக என்ன ஏற்பாடு செய்வது, என்ற விஷயங்களைப்பற்றி தகுந்த

உத்தரவுகள் பிறப்பிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. மேலும் நடவடிக்கைகள் முடிந்துவிட்டாலும்கூட குழந்தைகள் விஷயமாக அவ்வப்பொழுது யுக்தமாகத் தோன்றும் விதம் ஏற்பாடுகள் செய்யக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. தம்பதிகளுக்குள் ஏற்பட்ட திருமணமே ஆரம்பத்திலேயே செல்லாதெனத் தீர்ப்பு ஏற்பட்டாலும், அவ்விதத் தீர்ப்பு ஏற்படும் வரையில் ஜனித்த குழந்தைகள், அத்தாய் தகப்பனுக்குள் சட்டப்படி செல்லத்தக்க விவாகம் ஏற்பட்டு அவர்கள் பிறந்திருந்தால் எப்படியோ அதே விதமான பாத்தியங்கள் உண்டு. உதாரணமாக ஒரு திருமணம் செல்லாதெனக் கோர்ட்டால் உத்தரவு செய்யப்பட்டிருந்தாலும், அதற்குள் அந்தம்பதிகளுக்குப் பிறந்த ஆண் மகனுக்குத் தகப்பனுடைய சொத்துக்களில் வார்சுப் பாத்தியம் உண்டு.

## ஜீவனாம்சம்

விவாகம் செல்லாதென்று ஸ்தாபிக்கவோ, அல்லது விவாகரத்துச் செய்து கொள்ளுவதற்காகவோ கோர்ட்டில் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்போது, மனைவியின் காலட்சேபத்திற்கும் சரி, அந்த நடவடிக்கைகளை அவன் நடத்துவதற்கும் சரி அவளிடம் போதுமான வருமானமில்லாவிட்டால், அவன் கோர்ட்டுக்கு மனுப்போடுவதன் பேரில், கோர்ட் நடவடிக்கைகள் நடத்துவதற்கான செலவையும், அவளுடைய காலட்சேபத்திற்கான செலவுகளை வாரா வாரமோ மாதா மாதமோ, கணவன் வருமானத்திற்குத் தக்கபடி அவளுக்குக் கொடுத்து வரவேண்டுமென்று உத்தரவிடக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

திருமணம் செல்லாதென்று டிக்ரி ஏற்படும் போதும் சரி, விவாக ரத்து டிக்ரி ஏற்படும் போதும் சரி, மனைவிக்கு அவள் ஆயுள்வரை கணவன் (அதாவது ஏற்கனவே கணவனாக இருந்தவர்) ஜீவனாம்சம் கொடுத்துவரவேண்டுமென்று தீர்ப்புச் செய்யவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. டிக்ரி ஏற்பட்ட பிறகும் மனுவின் பேரில் இது விஷயமாக யுக்தமான உத்தரவுகள் பிறப்பிக்கவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. ஜீவனாம்சத் தொகைக்குக் கணவனுடைய சொத்துக்களை ஜவாப்தாரியாகச் செய்யலாம். ஜீவனாம்சத் தொகை மொத்தத் தொகையாகவும் இருக்கலாம், மாதா மாதம் அல்லது வேறு கெடுவுக்குக் கெடு கொடுக்கப்படவேண்டியதாகவும் உத்தரவு செய்யக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. மனைவிக்குச் சொத்துக்கள் ஏதாவது இருந்தால் அதையும், கணவனுடைய சொத்துகள் எவ்வளவு என்பதையும், கணவனுக்குக் கொடுக்கும் சக்தி எவ்வளவு என்பதையும், அவர்களுடைய நடத்தையையும் ஆராய்ந்து எல்லாவற்றிற்கும் ஏற்றவாறு ஜீவனாம்சத் தொகை நிர்ணயம் செய்யப்படும். சந்தர்ப்பங்கள் மாறினால் கோர்ட்டில் மனுப்போட்டு ஜீவனாம்சத் தொகையிலும் யுக்தமான மாறுதல்களைச் செய்து கொள்ளலாம். ஜீவனாம்சம் பெற்றுவரும் மனைவியானவள் வேறு புருடனை மறுமணம் செய்துகொண்டாலும் சரி, அவளுடைய நடத்தைத் தவறாக இருந்தாலும் சரி, ஜீவனாம்சத்தை ரத்துச் செய்ய கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

## கோர்ட் நடவடிக்கைகளைப் பற்றி

தாம்பத்திய உரிமைகளை அடையவோ, தம்பதிகள் கோர்ட் உத்தரவு மூலம் பிரிந்து தனித் தனியே வசிக்கவோ, திருமணம் செல்லாதென்றோ, விவாகரத்துக்காகவோ மனுப்போட வேண்டுமானால் ஜில்லா கோர்ட்டில் போடவேண்டும். அதாவது இச்சட்டப்படி திருமணமானது எந்த இடத்தில் நடந்ததோ, அல்லது தம்பதிகள் சேர்ந்து எங்கே வசித்துவருகிறார்களோ, அல்லது எங்கே கடைசியாகச் சேர்ந்து வசித்தார்களோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ஜில்லா கோர்ட்டில்தான் மனுப்போடவேண்டும். கணவன் வெளிநாட்டிலிருந்தால் மனைவி போடும் மனுவை இந்தியாவில் அவள் சாதாரணமாய் வசிக்குமிடத்திற்கு அதிகாரமுள்ள ஜில்லா கோர்ட்டிலேயே போடலாம்.

மனுக்களில் பரிகாரம் கிடைப்பதற்கு வேண்டிய விஷயங்களைச் சொல்லுவதுடன் மனுதாரும் எதிர்மனுதாரும் ஒற்றுமையாய் இருந்து அம்மனுப்போடவில்லை என்றும் கண்டிருக்க வேண்டும்.

மனுதாரோ, எதிர்மனுதாரோ விரும்பினால் நடவடிக்கைகளைப் பகிரங்கக் கோர்ட்டில் நடத்தாமல் தனித்த இடத்தில் நடத்தக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. நீதிபதிக்கே அப்படி விசாரிப்பதுதான் யுக்தமென்று தோன்றினாலும் அவர் அப்படிச் செய்யலாம்.

## குற்றங்கள்

ஒரு மனைவி இருக்கும்போது வேறு மனைவியை இச்சட்டப்படித் தம்மைத் திருமணம் செய்துகொள்ளும்படி செய்பவரும் சரி; ஒரு கணவன் இருக்கும்போது வேறு கணவனை இச்சட்டப்படித் தம்மைத் திருமணம் செய்துகொள்ளும்படி செய்பவரும் சரி இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைப் பற்றிய சட்டத்தின் 494 அல்லது 495 செக்ஷன்படி குற்றம் செய்பவராவார். (இதற்கு 7 அல்லது 10 வருடம் வரை சிறைத் தண்டனையும் அபராத தண்டனையும் உண்டு.) மேலும் இவ்விதம் செய்யப்படும் திருமணமும் செல்லாது. (செக்ஷன் 43) அதைப்போலவே இச்சட்டப்படி திருமணம்

செய்துகொண்ட தம்பதிகளில் எவரும் மற்றவர் உயிருடனிருக்கும்போது வேறு கலியாணம் செய்துகொள்வதும் அதே விதமான குற்றமாகும். அவ்விதக் கலியாணமும் செல்லாது. இச்சட்டப்படிக்கான உறுதிமொழிகளில் பொய் சொல்லுவதும் குற்றமாகும். இதற்கும் ஏழு வருடம் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலம். திருமண அதிகாரியானவர் வேண்டுமென்று தெரிந்தே, இச்சட்டப்படிக்கான பூர்வாங்க நோட்டீசைப் பிரசுரம் செய்யாமலோ, அல்லது பிரசுரத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளோ, அல்லது இச் சட்டத்தின் வேறு ஷரத்துக்களுக்கு முரணாகவோ ஒரு திருமணத்தை நடத்திவைத்தால் அது குற்றமாகும். இதற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனையோ, அல்லது ரூ 500 வரை அபராதமோ, அல்லது இரண்டுமோ, விதிக்கப்படலாம்.

## தடைப்பட்ட உரவு முறைகள்

பாகம் I. ஒரு ஆண் கீழேகண்ட உரவு முறை உள்ள ஸ்திரீயுடன் திருமணம் செய்து கொள்வது இச்சட்டத்தால் தடைப்பட்டிருக்கிறது.

(1) தாய் (2) தகப்பனின் விதவை (மாற்றான் தாய்) (3) தாயின் தாய் (4) தாயின் தகப்பனின் விதவை (5) தாயின் தாயின் தாய் (6) தாயின் தாயின் தகப்பனின் விதவை. (7) தாயின் தகப்பனின் தாய் (8) தாயின் தகப்பனின் தகப்பனின் விதவை (9) தகப்பனின் தாய் (10) தகப்பனின் தகப்பனின் விதவை (11) தகப்பனின் தாயின் தாய் (12) தகப்பனின் தாயின் தகப்பனின் விதவை. (13) தகப்பனின் தகப்பனின் தாய் (14) தகப்பனின் தகப்பனின் தகப்பனின் விதவை (15) மகள் (16) மகனின் விதவை (17) மகளின் மகள் (18) மகளின் மகனின் விதவை (19) மகனின் மகள் (20) மகனின் மகனின் விதவை (21) மகளின் மகளின் மகள் (22) மகளின் மகளின் மகனுடைய விதவை (23) மகளின் மகனின் மகள் (24) மகளின் மகனின் மகனின் விதவை (25) மகனின் மகளின் மகள் (26) மகனின் மகளின் மகனின் விதவை (27) மகனின் மகனின் மகள் (28) மகனின், மகனின், மகனின் விதவை (29) சகோதரி. (30) சகோதரியின் மகள் (31) சகோதரரின் மகள் (32) தாயின் சகோதரி (33) தகப்பனின் சகோதரி (34) தகப்பனின் சகோதரரின் மகள் (35) தகப்பனின் சகோதரியின் மகள் (36) தாயின் சகோதரி மகள் (37) தாயின் சகோதரரின் மகள்.

பாகம் 2:— ஒரு ஸ்திரீ கீழேகண்ட உறவு முறை உள்ள ஆணுடன் திருமணம் செய்து கொள்ளுவது இச்சட்டத்தால் தடைப்பட்டிருக்கிறது. (1) தகப்பன் (2) தாயின் கணவன் (3) தகப்பனின் தகப்பன் (4) தகப்பனின் தாயின் கணவன் (5) தகப்பனின் தகப்பனின் தகப்பன் (6) தகப்பனின் தகப்பனின் தாயின் கணவன் (7) தகப்பனின் தாயின் தகப்பன் (8) தகப்பனின் தாயின் தாயின் கணவன் (9) தாயின் தகப்பன். (10) தாயின் தாயின் கணவன் (11) தாயின் தகப்பனின் தகப்பன் (12) தாயின் தகப்பனின் தாயின் கணவன் (13) தாயின் தாயின் தகப்பன் (14) தாயின் தாயின் தாயின் கணவன் (15) மகன் (16) மகளின் கணவன் (17) மகனின் மகன் (18) மகனின் மகளின் கணவன் (19) மகளின் மகன் (20) மகளின் மகளின் கணவன் (21) மகனின் மகனின் மகன் (22) மகனின் மகனின் மகளின் கணவன் (23) மகனின் மகளின் மகன் (24) மகனின் மகளின் மகளின் கணவன் (25) மகளின் மகனின் மகன் (26) மகளின் மகனின் மகளின் கணவன் (27) மகளின் மகளின் மகன் (28) மகளின் மகளின் மகளின் கணவன் (29) சகோதரர் (30) சகோதரரின் மகன் (31) சகோதரியின் மகன் (32) தாயின் சகோதரர் (33) தகப்பனின் சகோதரர் (34) தகப்பனின் சகோதரரின் மகன் (35) தகப்பனின் சகோதரி மகன் (36) தாயின் சகோதரி மகன் (37) தாயின் சகோதரரின் மகன்.

குறிப்பு: இச்சட்டப்படி திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள் மேலே கண்ட உறவு முறை உள்ளவர்களாக இருக்கக்கூடாது. அதாவது மேலே கண்டிருக்கும் உறவு முறை உள்ளவர்கள் இச்சட்டப்படி திருமணம் செய்து கொள்ளவே முடியாது. வேறு முறைப்படி திருமணம் செய்துகொண்டு பிறகு இச்சட்டப்படி அத்திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் தம்பதிகளும் மேலேகண்ட தடுக்கப்பட்ட உரவு முறையினராக இருக்ககூடாது. ஆனால் இதற்கு மட்டில் ஒரு விதிவிலக்கு இருக்கின்றது. அதாவது இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே வேறு சட்டப்படிக்கோ, தொன்று தொட்ட பழக்கவழக்கத்தின்படியோ திருமணம் செய்து கொள்ளலாமென அனுமதிக்கப்பட்டு அதன்படி திருமணம் செய்து கொண்டிருக்கும் பழைய தம்பதிகள் மட்டில் இச்சட்டப்படி அத்திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளலாம், (செக்ஷன் 15) உதாரணமாக:— தாய் மாமன் மகளை இந்த ஆண் ஒருவர் திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் இங்கே இருக்கிறது. இச்சட்டப்படி இவர்கள் திருமணம் செய்து கொள்ள முடியாது. ஆனால் இந்தச் சட்டப்படி இவர்கள் இச்சட்டம் வருவதற்கு முன்பே திருமணம் செய்து கொண்டு விட்டாலும், அவர்கள் அத்திருமணத்தை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம்.



# வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.]

## தொழில் தகராறுச் சட்டப்படி சர்க்கார் நடவடிக்கை எடுக்க "முதலாளி—தொழிலாளர்" என்ற தொடர்பு முதலில் இருக்கவேண்டும். வேலைக்கே அமர்த்திக்கொள்ளப்படாத தொழிலாளர்களுக்கும், அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளுவதாக ஒப்புக்கொண்டு ஆனால் அப்படிச் செய்யத் தவறிய முதலாளிக்கும் ஏற்படும் சச்சரவு "தொழில் தகராறு" அல்ல.

[ஆதாரம்:—1954 (2) மதராஸ் லா ஜர்னல்-447 சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு.]

சென்னையிலிருக்கும் "ஸாகர் டாக்கீஸ்" என்ற சினிமாக் கொட்டகையானது சினிமாத் தொழில் நடத்துவதற்கான தளவாட சாமான்கள், சினிமாக் காட்டும் யந்திரங்கள், மின்சார யந்திரங்கள் முதலிய வசதிகளுடன் அதன் சொந்தக்காரரால் அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கட்டடத்தின் சொந்தக்காரரிடம் பல சிப்பந்திகளும் வேலை செய்துகொண்டிருந்தனர்.

இப்படி இருக்கும்போது, இந்தியாவில் பல இடங்களில் 'ஓடியன் சினிமா' என்ற பெயரால் சினிமாத் தொழில் நடத்திவரும் ஈச்வரதாஸ ஸாஹினி சகோதரர்கள் என்ற கூட்டு வியாபாரக் கம்பெனியார் ஸாகர் டாக்கீஸ் கட்டடத்தையும் அதிலுள்ள யந்திரங்கள் தளவாட சாமான்கள் உள்பட அதன் சொந்தக்காரரிடமிருந்து 5 வருடங்களுக்கு வாடகைக்கு ஒப்புக்கொண்டனர். மாத வாடகை ரூ. 4250 கட்டடக்காரர் பெயரிலுள்ள எலெக்ட்ரிக் லைசென்சும், சினிமாச் சட்டப்படிக்கான லைசென்சும் ஓடியன் சினிமாக்காரர்களுக்கு மாற்றப்பட்டன.

ஆனால் ஸாகர் டாக்கீசில், கட்டடக்காரரிடம் ஏற்கனவே வேலை செய்து வந்த பல சிப்பந்திகளைப்பற்றி என்ன ஏற்பாடு? அதைப்பற்றித் தான் இவ்வழக்கு. அச்சிப்பந்திகள் யாவரையும் அப்படியே, அவரவர்களுக்கான சம்பளம், சலுகைகள், வசதிகள் இவைகளை எல்லாம் முன்பு இருந்ததுபோலவே தொடர்ச்சியாகத் தம்மிடம் வேலைக்கு அமர்த்திக் கொள்வதாக ஓடியன் சினிமாக்காரர்கள் ஒப்புக்கொண்டதாக அச்சிப்பந்திகளுடைய கட்சி. தாம் அப்படி ஒப்புக்கொள்ளவில்லை என்று ஓடியன் சினிமாக்காரர்கள் சொன்னார்கள். முன்பு இருந்த சிப்பந்திகள் தங்களுக்கு மனுப்போட வேண்டுமென்றும் அவர்களில் யார் யார் தங்களுக்கு வேண்டுமோ அவர்களை மட்டில், அவர்களுடன் புதிதாக ஒப்பந்தம் செய்துகொண்டு தங்களிடம் வேலைக்கு வைத்துக்கொள்ளுவதாகத்தான் தாங்கள் ஒப்புக்கொண்டதாக ஓடியன் சினிமாக்காரர்களின் கட்சி. இச்சச்சரவில் தொழிலாளர்கள் தென் சினிமாத் தொழிலாளர் சங்கம் என்ற 'டிரேட் யூனியன்' சங்கத்தின் உதவியை நாடினர். அச்சங்கத்தின் தலைவர் இவ்விஷயத்தைப்பற்றி லேபர் ஆபீசருக்கு எழுதினார். லேபர் ஆபீசர் சமரசம் செய்து பார்த்தார். பலிக்கவில்லை. சமரச முயற்சிகளில் பலனில்லை என்று சமரச அதிகாரி சர்க்காருக்குத் தெரிவித்தார். தொழில் தகராறு சட்டப்படி சென்னை சர்க்கார் மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டனர். அதாவது இத்தொழில் தகராறைப்பற்றி விசாரணைசெய்து மத்தியஸ்தர் தீர்ப்புச் சொல்லும்படி 'இன்டஸ்டிரியல் டிரிபுனல்' என்ற தொழில் கோர்ட்டுக்கு இவ்வழக்கை அனுப்பினர். ஸாகர் டாக்கீசில் வேலைசெய்து வந்த எல்லாச் சிப்பந்திகளையும் ஓடியன் சினிமாக்காரர்கள் தொடர்ந்து அதே நிபந்தனைகள் சலுகைகளுடன் தங்களிடம் வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்களா என்பது முதல் பிரச்னை அப்படி அவர்கள் கடமைப்பட்டிராவிட்டால்,

அவர்கள் பழைய சிப்பந்திகளுக்கு எவ்வளவு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்பது இரண்டாவது பிரச்னை. இந்த இரண்டு பிரச்னைகளுக்கும் முடிவு சொல்லும்படி சர்க்கார் டிரிபுனல் கோர்ட்டாரைக் கேட்டிருந்தனர். இவ்வழக்கை விசாரித்த டிரிபுனல் கோர்ட்டார் தீர்ப்பளித்தனர்.

அதாவது பழைய ஸாகர் டாக்கீஸ்காரர்கள் அப்படியே தங்கள் வியாபாரத்தை ஒடியன் சினிமாக்காரர்களுக்கு மாற்றிவிடவில்லை. அதாவது ஸாகர் டாக்கீஸ்காரர்கள் நடத்திவந்த தொழிலை அதன் கொடுக்கல் வாங்கல் உள்பட அப்படியே நடத்துவதாக ஒடியன் சினிமாக்காரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஆனால் ஸாகர் டாக்கீஸில் ஏற்கனவே வேலை செய்துவந்த எல்லாத் தொழிலாளர்களையும் தாங்களிடம் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதாக ஒடியன் சினிமாக்காரர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்றும் தொழில் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். ஆகையால் ஒடியன் சினிமாக்காரர்கள் பழைய சிப்பந்திகள் யாவரையும் தங்களிடம் அதே சம்பளத்தில் அதே சலுகைகளுடன் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்ப்பளித்தனர். இத்தீர்ப்பின் பேரில் லேபர் அபெலட் டிரிபுனல் என்ற தொழில் அப்பீல் கோர்ட்டாருக்கு அப்பீல் நடந்தது. அப்பீலிலும் அதே தீர்ப்பு உறுதியாகிவிட்டது.

ஒடியன் சினிமாக்காரர்கள் சென்னை ஹைகோர்ட்டில் ஒரு 'ரிட்' மனுப்போட்டு, தொழில் கோர்ட்டுகள் இவ்விஷயத்தில் தலையிடவும் தீர்ப்பளிக்கவும் அதிகாரமே இல்லை என்றும் அவர்கள் செய்த தீர்ப்புகளை ரத்துச் செய்ய வேண்டுமென்றும் கோரினர்.

ஹைகோர்ட்டில் உயர்நீதிபதி ராஜகோபாலய்யங்கார் அவர்கள் தொழில் தகராறுச் சட்டத்தின் (Industrial Disputes Act 1947) ஷரத்துக்களைப் பரிசீலனைசெய்து, தொழில் கோர்ட்டுகள் செய்த தீர்ப்பை ரத்துச் செய்தனர்.

தொழில் தகராறுச் சட்ட ஷரத்துக்களின்படி, முதலாளிக்கும் (Employer) தொழிலாளர்களுக்குமிடையே (Workmen) சச்சரவுகள் அல்லது தகராறுகள் ஏற்பட்டால்தான், சர்க்கார் அதில் தலையிட்டு, அத்தகராரைப்பற்றி விசாரித்துத் தீர்ப்பளிக்கும்படி அவ்விஷயத்தைத் தொழில் கோர்ட்டுக்கு அனுப்ப முடியும். அதற்கு முதலாளியும் அவருக்குள் ஏற்கனவே வேலைக்கு அமர்ந்துகொண்ட தொழிலாளர்களும் இருக்கவேண்டும். இங்கே, ஒடியன் சினிமாக்காரர்கள் இச்சிப்பந்திகளை இன்னும் தங்களிடம் வேலைக்கே அமர்த்திக்கொள்ளவில்லை- அவர்களை எங்களிடம் இனி வருங்காலத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டதாக வைத்துக்கொண்டாலும் அது போதாது; வேலைக்கு உண்மையில் வைத்துக்கொண்ட பிறகுதான் தொழில் தகராறுச் சட்டப்படி ஒருவர் முதலாளியாகவும், மற்றவர் அவரிடம் வேலைக்கு அமர்ந்துள்ள தொழிலாளர்களாகவும் ஆவார்கள்; அதன் பிறகு அவர்களிடம் ஏதாவது சச்சரவுகள் அல்லது தகராறுகள் ஏற்பட்டால்தான், அச்சட்டப்படி சர்க்கார் அதில் தலையிட்டு அத்தகராறைத் தீர்க்கும்படி அதைத் தொழில் டிரிபுனலுக்கு அனுப்பலாம். இங்கே ஒடியன் சினிமாக்காரர்கள் உண்மையில் பழைய சிப்பந்திகளை வேலைக்கே அமர்த்திக்கொள்ளவில்லையாகையால், இங்கே "தொழில் தகராறு" (Industrial Dispute) ஒன்றும் ஏற்படவே முடியாது. சர்க்கார் இதில் தலையிட்டது சட்ட வரம்பு மீறியது. ஆகையால் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் அதை அனுசரித்து தொழில் கோர்ட்டார் அளித்த தீர்ப்பும் தொழில் அப்பீல் கோர்ட்டார் அளித்த தீர்ப்பும் ஒன்றும் செல்லாதென உயர்நீதிபதி அவர்கள் அவற்றை ரத்துச் செய்தனர்.

தொழில் தகராறு சட்டத்தில் 'தொழிலாளர்' (Workman) என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு தொழிலில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டவர்களும்; தொழில் தகராறு ஏற்பட்டிருக்கும் போது வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களும் தான் "தொழிலாளர்"களாவார்களென்று அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. வேலைக்கு அமர்த்திக் கொள்வதாக ஒருவர் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் செய்துவிட்டு, அப்படிச் செய்யாமலிருந்தால் அதனால் நஷ்டமடைந்தவர்கள் சாதாரண சிவில் கோர்ட்டில் நஷ்டஈடு தாவா செய்யலாமே ஒழிய, தொழில் தகராறு சட்டத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாதென்பதும் இத்தீர்ப்பில் விளக்கப்பட்டிருக்கிறது.

# பஸ்களில் பிரயாணிகளுடைய சாமான்கள் மழையில் நனைந்து போகாதிருகக் ‘டார்பாலின்’ எப்பொழுதும் வைத்திருக்க வேண்டுமா? சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு.

[ஆதாரம்: 1954 (2) மதராஸ் லா ஜர்னல் 474 சென்னை ஹைகோர்ட்.]

10-5-1953 அன்று காலையில் M. D. K. 877 என்ற பஸ் விஜயவாடாவிலிருந்து பந்தர் போய்க்கொண்டிருந்தது. காலை 8-15 மணிக்கு அப்பஸ்ஸை நடுவழியில் ஒரு ஹெட்கான்ஸ்டெபிள் நிறுத்தி, ‘செக்’ செய்தார். மழை வந்தால் சாமான்கள் நனையாமல் பாதுகாப்பதற்கான ‘டார்பாலின்’ என்ற மூடு துணி அப்பஸ்ஸில் இல்லை. மோட்டார் சட்ட விதி 380 ஷரத்தை மீறிய குற்றத்திற்காகப் பஸ்காரர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அன்று மழை ஒன்றுமில்லையாகையால் பஸ்ஸில் ‘டார்பாலின்’ வைத்துக்கொள்ள வேண்டியதில்லை என்று பஸ்காரர் கட்சி சொன்னார். இக்கட்சியை ஏற்றுக்கொள்ளாமல் பஸ்காரருக்கு மாஜிஸ்ட்ரேட் ரூ. 5 அபராதம் விதித்தார். அத்தீர்ப்பின் பேரில் ஏற்பட்ட அப்பீலிலும் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டானவர் அத்தண்டனையை உறுதி செய்து அப்பீலைத் தள்ளிவிட்டார்.

பஸ்காரர் அத்தீர்ப்பின் பேரில் சென்னை ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுக் கொடுத்ததின் பேரில், ஹைகோர்ட்டில் உயர்நீதிபதி பாலகிருஷ்ணய்யர் அவர்கள், பஸ்காரர் மோட்டார் விதியை மீறவில்லை என்று அபிப்பிராயப்பட்டு அவர் அடைந்த தண்டனை ரத்துச் செய்யப்பட்டது.

மோட்டார் சட்ட விதி 380-ல் இருப்பது என்னவென்றால் பஸ்களில் வெளிப்புறத்தில் வைத்திருக்கும் பிரயாணிகளின் சாமான்கள் மழைக் காலத்தில் நனையாமலிருக்கும்படி தண்ணீர் உள்ளே போகாமல் தடுக்கும் தகுந்த ‘வாடர்புரூப்’ மூடு துணியால் மூடப்படவேண்டுமென்றும்; அம்மூடு துணியானது காற்றிலடிபட்டு ஒதுங்காதபடி நன்றாகப் பொருத்தப்படவேண்டுமென்றும் இருக்கிறது. அதாவது முதலில், பிரயாணிகளின் ‘லக்கேஜ்’ சாமான்கள் இருக்கவேண்டும்; இரண்டாவதாக, அந்தச் சாமான்கள் பஸ்ஸின் வெளிப் பாகத்தில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். மூன்றாவதாக, மழைக் காலமாக இருக்கவேண்டும். இம்மூன்று சந்தர்ப்பங்களும் சேர்ந்திருக்கும்போதுதான் பஸ்காரர்கள் ‘டார்பாலின்’ மூடியால் அச்சாமான்களை மூடிப் பாதுகாக்கவேண்டுமென்று இருக்கிறதென்றும், மழையே இல்லாத அந்நாளில் கையில் பஸ்காரர் ‘டார்பாலின்’ மூடி வைத்திருக்கவேண்டுமென்று அம்மோட்டார் விதி வற்புறுத்தவில்லை என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர்.

## “வக்கீல்” பிரசுரத் தேதி பற்றிய அறிவிப்பு.

“வக்கீல்” பத்திரிகையின் பிரசுரத் தேதி பற்றிய இப்புதிய ஏற்பாட்டைத் தயவுசெய்து வருட சந்தாதார்களும் ஏஜண்டுகளும் கவனிக்கவும். “வக்கீல்” எப்பொழுதும்போலவே மாதம் ஒரு முறை பிரசுரம் செய்யப்பட்டு வரும். ஆனால் ஒவ்வொரு மாதமும் விஷயங்களை ஒட்டியும், சில முக்கிய சட்டங்களோ மசோதாக்களோ அம்மாதத்தில் வரக்கூடியவையாக இருந்தால் அவை வருவதை எதிர்பார்த்தும் “வக்கீல்” பிரசுரம் செய்யப்படும்.

வருட சந்தாதார்களுக்கு ரூ. 3-க்கு 12 இதழ்கள் கட்டாயமாக அந்தந்தப் பிரசுரத் தேதியிலேயே தபால் மூலம் அனுப்பப்படும். பத்திரிகை ஏன் வரவில்லை என்று எந்த வருட சந்தாதாரும் அவசரப்பட்டுக் கடிதம் எழுதவேண்டிய அவசியமில்லை. ஆனால் சந்தாத் தொகை தீர்ந்துவிட்டால், புதிய சந்தாத் தொகை ஆபீசுக்குக் கிடைக்கும்போதுதான் மறுபடியும் பத்திரிகை அனுப்ப முடியும். சந்தா இருக்கும் போதே, பத்திரிகை வரவில்லை என்ற சந்தேகம் தோன்றினால் மட்டில் சந்தா நம்பரைக் கண்டு கடிதம் எழுதவும். சந்தா நம்பர் இல்லாத கடிதங்களைக் கவனிக்கக்காலதாமதம் ஏற்படும்.

### ஏஜண்டுகள்

ஏஜன்சி விதிகளின்படி டிபாசிட் அல்லது முன்பணம் உள்ள ஏஜண்டுகளுக்குமட்டில் “வக்கீல்” பத்திரிகை பிரசுரம் செய்யப்படும் தேதியிலேயே அனுப்பப்படும். முன் பணமில்லாத ஏஜண்டுகள், தாமதமாகப் பணம் அனுப்பினால், அத்தொகை ஆபீசுக்குக் கிடைத்த பிறகு, அப்பொழுது அம்மாத இதழ் கைவசம் இருந்தால் அவர்களுக்கு அனுப்பப்படும். பிரதிகள் தீர்ந்துவிட்டால் அவர்களுக்கு அடுத்த மாத இதழ்கள்தான் அனுப்பப்படும். முன்பணம் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஆபீசுக்குக் கடிதம் எழுதும் ஏஜண்டுகள், அத்துடன் அவர்களுடைய கணக்கு நகலும் அனுப்பினால் அதை எங்கள் கணக்குடன் ஒத்துப்பார்த்துக்கொண்டு பதில் எழுதுவது சாத்தியமாகும்.

# கேள்வியும் பதிலும்



இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## இந்துச் சட்டம்—ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் சேர்த்து தகப்பன் சொத்தில் வார்சு பாத்தியம் கொடுக்கும் சட்டம் வந்துவிட்டதா.

107. **கேள்வி:** (M. P. செல்லத்துரைப் பாண்டியன்—செங்கோட்டை) இந்துத் தகப்பனுடைய சொத்தில் தனது ஆண் (மகன்) பெண் (மகள்) இருவருக்கும் சம பாகமாகச் சொத்து பெறுவதற்குத் தற்சமயம் சட்டம் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா?

**பதில்:** தற்சமயம் அமுலிலுள்ள இந்துச் சட்டப்படி, தகப்பன் இறந்தால் ஆண் மகன் தான் அவருடைய வார்சு. ஆண் மக்கள் இருக்கும்போது பெண் மக்களுக்குத் தகப்பனுடைய சொத்தில் இப்போது வார்சு பாத்தியம் இல்லை.

ஆனால் இது விஷயமாகச் சட்டத்தை மாற்றுவதற்காக இந்திய மத்தியசர்க்கார், பார்லிமெண்டில், ஒரு மசோதாக்கொண்டு வந்திருக்கின்றனர். இம்மசோதாப்படி இந்து ஒருவர் இறந்து போனால் அவருடைய சொத்தில் ஆண் மக்கள் பெண் மக்கள் இருவர்களுக்கும் சொத்தில் வார்சு பாத்தியம் ஏற்படும். ஆண் மகனுக்கு ஒரு பங்கு பெண் மகளுக்குப் பாதிப் பங்கு வீதம் கணக்கு செய்யப்படும். அதாவது ஒருவருக்கு ஒரே ஆண் மகனும் ஒரே பெண் மகளும் இருந்தால ஆண் மகனுக்கு இரண்டு பங்கும் பெண் மகளுக்கு ஒரு பங்கும் கிடைக்கும். இம்மசோதா பிரிபடாத இந்துக் குடும்ப சொத்துக்களுக்குக் கிடையாது. மேலும் தம்முடைய சொத்துக்களைப் பற்றி உயில் மூலம் விநியோகம் செய்யாமல் இறந்துபோகும் இந்துவின் சொத்துக்களைத்தான் மேற்கண்டபடி ஆண் பெண் வாரிசுகள் அடைவார்கள். இம்மசோதாவுக்குப் பொதுமக்களுடைய ஆட்சேபனை ஆலோசனைகளைச் சர்க்கார் கேட்டிருக்கின்றனர். இம்மசோதாவானது இன்னும் சட்டமாகவில்லை. இது சட்டமான பிறகுதான் அது அமுலுக்கு வரும்.

## வியாபாரியானவர் தம்மிடம் சரக்கு வாங்குபவரிடம் கட்டாயமாக விற்பனை வரியையும் வசூல் செய்துவிடவேண்டுமா?

108. **கேள்வி:** (Y. A. கனி—அய்யம்பேட்டை) ஒரு வியாபாரி தாம் விற்கும் சரக்குக்கு (சரக்கு வாங்குபவரிடமிருந்து) விற்பனை வரி வசூலிக்காமல் விடுவது தற்பொழுது அமுலில் உள்ள புதிய சட்டப்படி குற்றம் என்று ஒரு அதிகாரி கூறுகிறார். அது சரியா?

**பதில்:** சரியல்ல. விற்பனை வரிச் சட்டப்படி சர்க்காருக்கு விற்பனை வரி கொடுக்க வேண்டியவர் சரக்கு விற்கும் வியாபாரியே,

(இரண்டொரு சரக்குகள் சம்மந்தப்பட்டவரை யில் சரக்கு வாங்கும் வியாபாரியேதான் விற்பனை வரி கொடுக்கக் கடமைப்பட்டவராவார்.) விற்பனை வரி கொடுக்கவேண்டிய சரக்கு விற்கும் வியாபாரியானவர், தாம் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய விற்பனை வரியையும் சேர்த்துத் தம்மிடம் சரக்கு வாங்குபவரிடம் இஷ்டப்பட்டால் வசூலிக்கலாம். அப்படி வசூலிப்பதைச் சட்டம் மறைமுகமாக அனுமதிக்கின்றது. அவர் அதை வசூலிக்காமலும் இருக்கலாம். அது அவருடைய இஷ்டம். ஆனால் அவர் தம்மிடம் சரக்கு வாங்குபவரிடம் அதை வசூலித்தாலும் வசூலிக்கா விட்டாலும், அவர் செய்யும் விற்பனைகளுக்கான விற்பனை வரியை அவர் சர்க்காருக்குக் கட்டிவிட வேண்டும். தாம் சர்க்காருக்குக் கட்டவேண்டிய வரித்தொகையைவிட அதிகமான தொகையை அவர் வாடிக்கைக்காரர்களிடமிருந்து 'விற்பனை வரி' என்று வசூலித்திருந்தாலும் அந்த அதிகத் தொகையையும் அவர் சர்க்காருக்குக் கட்டிவிட வேண்டும். அவ்வளவுதான்.

## வைப்பு மனைவியின் பேரனுக்கு உயில் மூலம் கொடுக்கப்பட்ட சொத்துக்களைச் சொந்த மகன் விற்கலாமா?

109. கேள்வி: (லக்ஷ்மண கவுண்டர் — பெருந்துறை) இந்துக் குடும்பத்தில் வைப்பு மனைவியின் மைனர் பேரனுக்கு உயில் எழுதியிருக்கும் சொத்தை புருடன் இறந்த பிறகு சொந்த மனைவியின் மகனும், வைப்பு மனைவியும் சேர்ந்து விற்கலாமா?

பதில்: சொத்தின் தன்மை என்ன என்று தெரிந்தால்தான் இக்கேள்விக்குப் பதில் சொல்லமுடியும். உயிலில் கண்டிருக்கும் சொத்தானது உயில் எழுதி வைக்கும் இந்துவின் பூர்வீகக் குடும்பச் சொத்தாக இருந்து குடும்பமும் பிரிபடாமலிருந்தால், அச்சொத்துக்களை உயில் மூலம் விநியோகம் செய்யவே உரிமை இல்லை. தகப்பன் இறந்த பிறகு சொத்துக்கள் அவருடைய சொந்த மனைவியின் மகனைச் சேரும். மகன் மட்டிலுமே அதை விற்றுவிடலாம். அப்படியல்லாமல், உயிலில் கண்ட சொத்தானது உயில் எழுதிவைத்தவருடைய சுயசம்பாத்தியச் சொத்தாக இருந்தாலும் சரி; குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்துகொண்டு தமக்குத் தனி உரிமையுடன் கிடைத்த பாக சொத்தாக இருந்தாலும் சரி அச்சொத்தைத் தகப்பன் உயில் மூலம் யாருக்கு வேண்டுமானாலும் கொடுத்துவிடலாம். அப்படி இருந்தால் வைப்புப் பேரனுக்கு அச்சொத்தை உயில் மூலம் கொடுத்திருப்பது செல்லும். அச்சொத்தில் அவருடைய சொந்த மகனுக்கோ, வைப்பு மனைவிக்கோ எவ்வித உரிமையும் இல்லை. அவர்கள் அச்சொத்தை விற்கமுடியாது.

## ஜவுளி தலைச்சுமை வியாபாரிக்கு விற்பனை வரி உண்டா?

110. கேள்வி: (சந்தா. நெ. 2282) ஒரு தலைச்சுமை ஜவுளி வியாபாரி தான் கொள்முதல் செய்த ஜவுளிகளுக்கு எல்லாம் பில் வாங்கியிருந்து தான் சில்லரையில் விற்பனை செய்ததற்கு பில் இல்லாது விற்பனை செய்தால் அந்த வியாபாரிக்கு விற்பனை வரி உண்டா? அப்படி வரி விதிக்கப்பட்டால் டை வியாபாரியின் கொள்முதல் கணக்கிலிருந்து எத்தனை சதவீதம் சேர்த்து விற்பனை வரி விதிப்புக்கு உட்பட்டவர் அப்படி பில் இல்லாமல் விற்பனை செய்த சரக்குகளுக்கு வரி விதிப்பு உத்தியோகஸ்தர்கள் எப்படி வரி விதிக்க கடமை பட்டவர்கள்?

பதில்: தலைச்சுமை ஜவுளி வியாபாரியும் ஒரு வருடத்தில் ரூ. 10,000க்குக் குறையாமல் மொத்த வியாபாரம் செய்தால் அவரும் விற்பனை வரி கொடுக்கக் கடமைப்பட்டவரே. சரிவர விற்றுமுதல் கணக்கு வைத்துக்கொள்ளாதவர்களுக்கு உத்தேசமாய் அவருடைய மொத்த வியாபாரத்தை நிர்ணயம் செய்து வரி விதிக்கும் அதிகாரம் விற்பனை வரி அதிகாரிகளுக்கு உண்டு. கொள்முதல் தொகையில் இவ்வளவு சதவிகிதம்தான் கூட்டிக்கொண்டு அவ்வியாபாரியின் மொத்த வியாபாரத் தொகையை நிர்ணயம் செய்யவேண்டுமென்று சட்டபூர்வமான விதி ஒன்றுமில்லை. ஆனால் இன்ன இன்ன வியாபாரங்களில் எவ்வளவு எவ்வளவு சதவிகிதம் லாபம் ஏற்படலாமென்று ஒரு குத்துமதிப்பான கணக்கை 'டிபார்ட்மெண்டார்' தங்களுக்குள் மனதில் வைத்துக்கொண்டு மொத்த வியாபாரத் தொகையை நிர்ணயம் செய்வார்கள்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

K. ஸ்ரீநிவாஸன், M. A.

(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

[1932ஆம் வருடத்தியச் கூட்டுறவுச் சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் "கூட்டுறவு" 1954 மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகிறது.]

கூட்டுறவுச் சங்கத்தின் நிகர லாபம் என்ன செய்யப்படுகிறது?

கூட்டுறவுச் சங்கத்தின் சொந்த ஆஸ்தி (லாபம்) கூட்டுறவுச் சட்டம், ரூல், பைலாக் களில் சொல்லப்பட்டுள்ளபடி விநியோகிக்கப்பட வேண்டும்.

1. செக்ஷன் 35, ரூல் XIIIஐ அனுசரித்து ஒவ்வொரு சங்கமும் நிகர லாபத்தில் கால் பங்குக்குக் குறையாமல் அந்தச் சங்க பைலாவில் கோரியுள்ளபடி க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டும். எஞ்சிய லாபத்திலிருந்து பைலா நிபந்தனைப்படி சங்க எழுத்து வேலையைக் கவனித்த அங்கத்தினருக்கு ஊதியம் (Remu nerotion); சிப்பந்திகளுக்கு போனஸ்.

2. சங்க வசூல் முதலிய வேலைகளைக் கவனித்த உத்தியோகஸ்தருக்குச் சன்மானம் (Honararia.)

3. மெம்பர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை மீது மகாசபை கொடுக்க தீர்மானிக்கும் டிவிடெண்டு (Dividend).

4. சங்கத்தின் உற்பத்தி அல்லது வியாபாரத் திற்கு உதவியுள்ள அளவில் மெம்பர்களுக்கு மகாசபை கொடுக்கத் தீர்மானிக்கும் போனஸ் (Bonus).

5. செக்ஷன் 36 ரூல் XII (5) சங்க பைலா, இவைகளை அனுசரித்து நிகர லாபத்தில் ரூ. 100க்கு 7½க்கு அதிகப்படாமல் மகாசபை கொடுக்கத் தீர்மானிக்கும் பொது-நல-நிதி (Common-good-fund) இவைகளுக்கு ஒதுக்கலாம்.

6. மேலும், பைலாவில் விதித்திருந்தால் அதன் விபரப்படி கட்டிடநிதி, டிவிடெண்டு நிதிகளுக்கு ஒதுக்கலாம்.

7. இதற்குப் பின்பும் லாபம் ஏதாவது மிச்சம் இருந்தால் அது பூராவும் க்ஷேம நிதிக்குக் கொண்டுபோகப்படவேண்டும்.

சாதாரணமாக நிகர லாபத்திலிருந்து க்ஷேம நிதிக்கு கிராம நாணயச் சங்கங்கள் 50%ம், நகர நாணயச் சங்கங்கள் 25%ம், ஸ்டோர், உற்பத்தி சங்கங்கள் 40%ம், வரையறுக்கப்பட்ட இதர சங்கங்கள் 25%ம் செலுத்துகின்றன. பிரதம சங்கங்களில் பங்குமீது டிவிடெண்டின் உச்ச அளவு 6¼%; போனசின் உச்ச அளவு, நிகர லாபத்தில் 25%, (ரூ 1க்கு 3 பைசாவுக்கு அதிகப்படாமல்) ஆக விதிக்கப்பட்டுள்ளது.

## க்ஷேமநிதி

க்ஷேமநிதி (Reserve Fund) என்பது சங்கம் செக்ஷன் 35படி நிகர லாபத்திலிருந்து கட்டாய மாக ஏற்படுத்தவேண்டிய ஒரு நிதி அதன் பெயரே அது சங்கத்தின் க்ஷேமத்தைக் கருதி ஏற்படுத்தப்பட்டது என்பதை விளக்கும்.

க்ஷேமநிதிக்கு ஒவ்வொரு சங்கமும் செக்ஷன் 25 ரூல் XIII படி பிரதி வருஷ நிகர லாபத்தி லிருக்கும் தொகை ஒதுக்கவேண்டும். அந்தத் தொகை எப்படி ஒதுக்கப்படவேண்டுமென்பது, ரிஜிஸ்திராரால் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் அந்தந்த சங்க பைலாவில் விபரமாகச் சொல்லப் பட்டிருக்கும்.

க்ஷேமநிதிக்கு ஒதுக்கப்படவேண்டிய தொகை எந்தச் சங்கத்திற்கும் நிகர லாபத்தில் 25%க்கு குறையாமல் இருக்கும்.

க்ஷேமநிதி சங்கத்தின் பொறுப்பு. அதை ஈடு செய்ய சங்கம் ஆஸ்தியிலிருந்து சரியளவு தொகையை ரிஜிஸ்திரார் கோரும் வகையில் வெளியில் போட்டு வைக்கவேண்டும். (ரூல் XIII) இந்தத் தொகை செக்ஷன் 34 நிபந் தனைப்படி போட்டு வைக்கப்படவேண்டும்.

வெளியாரிடம் கடன் வாங்காமல் தனது வேலையைக் கவனித்து வரும் சங்கங்களை அதன் க்ஷேமநிதித் தொகையை வெளியில் போடா மல் தனது தொழிலிலேயே, பூராவுமோ அல்லது ஒரு பகுதியையோ ஈடுபடுத்த ரிஜிஸ்தி ரார் தமது உசிதம்போல் அனுமதிக்கலாம்.

பைலாப்படி வெளியில் கடன்வாங்க முடியாத சிக்கனச் சங்கம் போன்றவைகள் தங்கள் க்ஷேம நிதி பூராவையும் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

### ஷேமநிதி எவ்விதங்களில் செலவழிக்கப்படலாம்?

ஷேமநிதி சங்கத்தின் பிரிவினை செய்யக்கூடாத சொந்தசொத்து. அதைச் சங்கம் மகாசபை, ரிஜிஸ்திரார் இவர்களின் அனுமதியைப் பெற்று.

1. எதிர்பாராமல் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்யவும்,

2. சங்க வேலைக்கு அவசியமான நிலம் வாங்கவும், வீடுகட்டவும் உபயோகிக்கலாம். (XIII-A)

மற்றப்படி சங்கம் கலைக்கப்பட்டு சங்கத்திற்கு வரக்கூடிய பாக்கிகள் பூராவும் வசூலிக்கப்பட்டபின்பும் சங்கம் வெளியாருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிகள் தீராமலிருந்தால், அந்த நிலையில் ஷேமநிதி கீழே குறித்துள்ளபடி லிக்விடேடரால் செலவழிக்கப்படும்.

முதலில் சங்கம் கொடுக்க வேண்டியுள்ள கடன்களைச் செலுத்தவும்,

பின்பு, சங்கம் கொடுக்கவேண்டியுள்ள மெம்பர்களின் பங்குத் தொகைகளைத் திருப்பவும்.

கடைசியாக, மெம்பர்களின் பங்குத் தொகை மீது கொடுபடவேண்டி ஏற்படும் டிவிடெண்டுகளைக் கொடுக்கவும்.

இவைகள் போகப் பாக்கியிருக்கும் தொகை, சங்கத்தின் கலைப்புத் தேதியில் உள்ள மெம்பர்கள் கொண்ட மகாசபை தீர்மானிக்கும் வகையில் ஒரு பொதுநல காரியத்திற்குச் செலவழிக்கப்படலாம். மகாசபை லிக்விடேடர் கோரிய 30 நாட்களுக்குள் தீர்மானம் எதுவும் செய்யாவிட்டால் அந்தத் தொகையை லிக்விடேடர் ஜில்லா பாங்கியிடம் ரூல் XIV படி உபயோகிக்கும்படி கொடுத்து விடுவார்.

### கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்களை வெளியார் உபயோகிக்கும்படி வீடலாமா?

இது பற்றிய நிலை வெகுகாலம் தெளிவற்றதாய் இருந்தது. ரூல் XIII b. 1941ல் ஏற்பட்டபின்பு எந்தச் சங்கமும் தனது வேலை ஸ்தலத்தைக் கூட்டுறவல்லாத காரியங்களுக்குக் கொடுப்பது கூடாது. இதாரின் கூட்டுறவுக் காரியங்களுக்குகூட, சங்கத்தின் வேலைகள் பாதகமடையும் வகையில் தொடர்ந்து கொடுப்பது கூடாது. கூட்டுறவாளரல்லாதவர்களுக்குக் கொடுப்பது முற்றிலும் கூடாது.

இந்த விதி, சங்கத்தின் வேலை ஸ்தலத்திற்கு மட்டுமே இருப்பதால் சங்கம் தனது வேலைக்கு அவசியமில்லாத பாகங்களைப் பிறருக்கு வாடகைக்கு விடுவதில் ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனாலும், வாடகைக்கு விடும் விஷயத்தில் முதல் சலுகை இடவசதி கோரும் இதர கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் காட்டப்படுவது அவசியம். வாடகைக்கு விடுமுன் சங்கம் குறிப்பிட்ட ஸ்தலம் சங்க வேலைக்குத் தேவையில்லையென்று தீர்மானித்து அதை வாடகைக்கு விட ரிஜிஸ்திராரின் முன் சம்மதியைப் பெறுவது அவசியம். (தொடரும்)

---

## ஷாப் சட்ட விதிவிலக்கு. மூன்று சிப்பந்திகளுக்கு அதிகமில்லாத கடைகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் ஒரு வருடத்திற்கு ஷாப் சட்டமே கிடையாது.

ஷாப்ச் சட்டத்தின் கீழ் சென்னை சர்க்காரால் கீழே கண்ட விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது முதலாளியை நீக்கி ஒரு கடையிலோ அல்லது ஸ்தாபனத்திலோ, மூன்று அல்லது அதற்குக் குறைவான எண்ணிக்கையுள்ள சிப்பந்திகள் மட்டில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டிருந்தால், அவ்விதக் கடைகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் ஒருவருடத்திற்கு (அதாவது 8-12-1954 முதல் 8-12-1855 வரையில்) ஷாப்சட்டத்தின் எந்த ஷரத்துக்களும் கிடையாது. என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (அதாவது இவ்விதக் கடைகளும் ஸ்தாபனங்களும் இனி வார விடுமுறை விடவேண்டும்மென்ற கட்டாயமோ, தினசரி எத்தனை மணிக்குத் திறந்து மூடவேண்டுமென்பதோ, சிப்பந்திகளின் வேலை நேரம் பற்றிய கட்டுப்பாடு விதிகளோ ஷாப்சட்டத்தின் மற்ற ஷரத்துக்களோ ஒன்றும் ஒருவருடத்திற்குக்கிடையாது.) ஆனால் இவர்கள் 'விசிட்புக்' என்ற புத்தகம் மட்டில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது ஷாப் இன்ஸ்பெக்டர் அக்கடை அல்லது ஸ்தாபனத்தில் எவ்வளவு சிப்பந்திகள் வேலை செய்கின்றனர் என்று பார்த்துப் பதிந்து வைத்துவிட்டுப் போக மட்டில் ஒரு புத்தகம் வைத்துக் கொண்டால் போதுமென நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. (8-12-1954 சென்னை சர்க்கார் கெஜட்)

---

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR
AND PUBLISED BY, R. NARASIMHAN, B.A,. B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM,
FOR SOUTHERN BOOK HOUSE LTD, *Editor* V. S. VIJAYARAGAVACHARI, B.A.,B.L.




மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற
—: அறந்தாங்கி :—

# 786 சங்கு சோப்பை

**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணு 0-1-3தான்**




தயாரிப்பவர்:-
இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.




# 'ஜெயராம்' ஹெர்னியா கியூர்

**குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள்.**
3—தினத்தில் குணம் தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| எலிமெண்டரி கேஸ் | .... | ரூ. | 6-0-0 |
| செகண்டரி கேஸ் | ... | ரூ. | 11-0-0 |
| அட்வான்ஸ் கேஸ் | .... | ரூ. | 25-0-0 |

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.
**G. ஜெயராம் வைத்தியசாலை,**
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.




**Attarwalla Chawll, Mori Road, Mahim Bombay, 4-2-48.**

ஐயா, எனக்குத் தாங்கள் அனுப்பிய ஹெர்னியா கியூர் சக்லவிர்த்தினியும், நான் இந்நாள்வரை அருந்தினேன். ஆனால் இன்றுதான் காயசுத்திப் பஸ்பம் சாப்பிடுகிறேன். லேகியத்திலேயே எனக்கு இருந்த விதைப்பையில் வீங்கிக்கொண்டிருந்த காற்று குறையத் தொடங்கிவிட்டது. இன்னும் பஸ்பம் சாப்பிடுவதற்குள் அநேகமாகப் பேர்பாதிக்கு மேல் சுத்தமாகிவிடுமென்று நம்புகிறேன். இம்மருந்தைச் சாப்பிட்டு முடிந்ததும் இன்னும் 1 டின் ஹெர்னியா கியூர் வரவழைத்துச் சாப்பிட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன். எத்தனையோ வைத்தியர்கள் கைவிட்ட இவ்வியாதிக்கு உயிருக்குத் துணிந்தே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த சமயத்தில் உங்கள் விளம்பரத்தைக்கண்டு இதைக் கடைசி தடவையாய்ப் பார்த்து விடலாம் என்று முழுமனமில்லாமல்தான் தங்களின் மருந்தை வருத்தினேன். ஆனால் இன்றுதான் அதன் மகிமையை உணர்ந்து அளவிலாச் சந்தோஷமடைகிறேன்.

இப்படிக்கு,
**K. S. ஷண்முகம்,** பாம்பே.

Regd. No. M. 5399 "THE VAKIL" Nov. - Dec. 1954


ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ..

## கும்பகோணம்

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம்,
வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்,
பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
SURAJ AGENCIES.
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris.*
B. BALAPATTABI CHETTIAR.
249, Vysyal Street.
COIMBATORE.